2012
-க்கான
தேவ வாக்கு
பரலோகத்தின் தேவனானவர்
எங்களுக்குக் காரியத்தைக்
கைகூடிவரப்பண்ணுவார்,
அவருடைய ஊழியக்காரராகிய
நாங்கள் எழுந்து கட்டுவோம்
நெகேமியா 2:20

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெப பங்காளரே!

காரியங்களைக் கைக்கூடிவரப் பண்ணுகிற பரலோகத்தின் தேவனுடைய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள்! (நெகே. 2:20). இதுவரை நம்மை, பின்நாட்களில் நமக்கு நன்மை செய்யும் பொருட்டு, பயங்கரமான வனாந்தர வழியாய் நடத்தி வந்தவரும், நம்மை சோதித்து அறிந்து, நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள நம்மிடத்தில் பெலன் உண்டோ என்பதனை காண்பிக்கும் வண்ணம், சோதனை வழியாகவும், வேதனை வழியாகவும் நம்மைக் கைத்தாங்கி நடத்தி, புத்திரனைப் போல சிட்சித்து, நாம் நம்முடைய பெலவீனங் களையும், அறிவீனங்களையும் அறிந்து கொள்ளும் வண்ணமும், அவருடைய கிருபையால் நிலை நிற்கிறோம் என்பதனை உணர்த்துவிக்கும் வண்ணமும், நம்மைப் பழக்குவித்தவருக்கே துதியும் கனமும் சதா காலங்களிலும் உண்டாவதாக (உபா. 8:15, 2, 5, 18). இந்தப் புதிய வருடத்திலும் அவர் நம்மை கடினப் பாதையில் நடத்திட நேர்ந்தாலும், நமக்கு செய்வதற்கு அவர் தந்த பணிகளைச் செய்து முடிக்க அவரின் பெலன் போதுமானதாக இருப்பதுமல்லாமல், அவருக்குப் பிரியமானதைச் செய்யவும் நம்மைத் தகுதிப்படுத்தட்டும்.

இஸ்ரவேல் புத்திரரின் நிலையைப் பாருங்கள்; இவர்கள் பாபிலோனிலிருந்து திரும்பியவர்கள், செருபாபேல், யோசுவா வின் தலைமையில் (சிறையிருப்பிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர் களாகத்தான் சென்றார்கள் (எஸ்றா 1:11). பொன், வெள்ளியோடுதான் எருசலேமுக்கு வந்திருந்தார்கள்; ஆனால், இப்பொழுதோ சொந்த தேசத்தில் **மகா தீங்கையும், நிந்தையையும்** அனுபவிக்கிறார்கள் (நெகே. 1:3). அலங்கம் இடிக்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டதினால் **பாதுகாப்பும்** இல்லை; இது நெகேமியாவைப் போன்ற இராஜ அரண்மனைவாசியையும் அழ வைத்து விட்டது. எதனையும் இழக்கவும், செயல்படவும் ஏவி விட்டது.

குப்பை மேடுகளுக்குக் குறைவில்லை (நெகே. 2:13,14); **மண்மேடுகள் எங்கு பார்த்தாலும்.** அதனை அகற்றுவதில் மிகுந்த பெலன் செலவழிக்க வேண்டுமே என்ற நிர்ப்பந்தம் (நெகே. 4:10). எதிரிகளும் சக்கந்தம் பண்ணும் நிலை; மண்மேடுகளுக்கு உயிர் கொடுக்க யாரால் கூடும்? சுட்டெரிக்கப்பட்டவைகளில் மீண்டும் ஜீவன் தோன்றுமோ, அதனை எடுத்துக் கட்ட

பிரயாசப்பட்டாலும், நரி நடந்து சென்றாலும் தாக்குப்பிடிக்காதே என்று **கிண்டல்** செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்ட வேலை அது (நெகே. 4:2.3).

நிலைமை பரிதாபம், ஆனால் தேசத்தின் மேல் அதிகாரியும், இராஜாவும் இந்தக் காரியத்திற்கு முழுவதும் கைக்கொடுக்க ஆயத்தம் (நெகே 2:1-9). ஆனால், கீழ்மட்ட அதிகாரிகளுக்கோ கோபம், எரிச்சல் (நெகே 4:1). மற்றவர்களைக் கீழே தள்ளி அழுத்தியே வாழ்ந்தவர்கள் அவர்கள் (நெகே 2:10). **ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, வலுக்கட்டாய வசூல் வேலைகளை நடப்பித்து, அதிகாரம் செலுத்தி, அதிகார துர்ப்பிரயோகம் செய்துவந்த அவர்களுக்கு, வித்தியாசமாய் வாழ்கிற ஒரு தேவனுக்குப் பயந்த அதிகாரியையோ, ஜனத்தின் நன்மை நாடுகிறவனையோ பிடிக்காது** என்பது உண்மையல்லவா (நெகே. 5:14-18). இந்த அதிகாரிகளுக்கு **தெய்வ பயமோ, தேவனைக் குறித்த அறிவோ, தேசத்தின் ஜனத்தினைக் குறித்த பாரமோ இருந்ததில்லை.**

ஜனத்தின் பாதுகாப்பிற்கு உதவத் துடிக்கிறவர்களை அழிக்கவே அவர்களுடைய இடைவிடாத முயற்சி இருக்கும் (நெகே. 4:11). வேலை செய்யத் துடிப்பவர்களை, தேவனுடைய காரியத்தில் ஈடுபாடு கொள்ள விரும்புகிறவர்களை மனமடிவாக்கும் வண்ணமும் **அவர் களுடைய பேச்சு இருக்கும்** (நெகே. 4:5). வேலை செய்ய ஆவல் உள்ளக் கூட்டத்தின் துரிதத்தினை திசை திருப்புவதிலும், வீணாய் செலவழிக்கப்படுவதிலும் இவர்கள் கவனம் செலுத்தி, உபாயத் தந்திரங்களை உண்டாக்குவார்கள் (நெகே. 4:6,16,21).

தேவ ஆலயத்தினையும், தேவ ஊழியர்களையும், தேவ மனிதர்களையும் தவறாக உபயோகிக்க அஞ்சாதவர்கள் இவர்கள் (நெகே. 6:10,12-14). இதுதானே இன்றைய சபையின், சபைத் தலைவர் களின் நிலை. ஆனால், **இதற்கு மத்தியில் தேவன் காரியத்தை கைக்கூடி வரப்பண்ணுகிறவர்** (நெகே. 6:16).

இதன் மத்தியில் சகோதரர்களுக்குள்ளே பணவசதி படைத்தவர்களும், சக்தி படைத்தவர்களும் தங்கள் சக்தியையும், பணத்தையும் உபயோகப்படுத்தி மற்றவர்களை அடிமைகளாக்க பஞ்சத்தினையும் காரணமாக்குவார்கள் (நெகே. 5:2-5). **தேவ பயம் பணத்தினால் அபகரிக்கப்பட்டுப் போயிற்று** (நெகே. 5:9). **இப்படிப்பட்டவர்களுக்கு முன்மாதிரிகளாக வாழ்கிறவர்களும் இல்லாமற் போனார்கள்** (நெகே. 5:10). ஆசாரியர்கள் உண்டு, ஆனால் காரியங்களைக் கண்டும் காணாமற் போகிற குருடராய் வாழ்ந்து விட்டவர்கள் அவர்கள் (நெகே. 5:12; ஏசாயா 42:19,20). அப்படிப்பட்டவர்கள் எங்கே முன்மாதிரிகளாக வாழ முடியும்? (Role Models).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருந்தாலும், பொன் பொரு ளோடு வந்திருந்தாலும், பாதுகாப்பான அரண்களுக்குள் வைக்கப்பட்

டாலும், பல காலம் **தாங்கள் இப்பூமியில் பரதேசியாய் வாழவே அழைக்கப்பட்டவர்கள் என்பதனை நினைக்காமற் போனதின் விளைவுகள் என்பதனை** உணர்த்துவிக்க வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று. அது யோசுவாவின் காலத்திலிருந்தே அனுசரிக்கப்படாததினால், ஜனங்களுக்குள் பரிசுத்தக் குலைச்சலும், அதிகாரப் பெருமையும், ஆணவமும் உண்டாக்கி விட்டுவிடுமே. **இதன் மத்தியிலும், தேவன் காரியத்தைக் கைக்கூடி வரப்பண்ணுவார்.**

குறித்த வேளையில் (52 நாட்களில்) 90 வருடங்களாகப் பாழாகக் கிடந்தவைகள் கட்டப்படக்கூடுமானால், இன்னும் அது சம்பவிக்கக்கூடியதே (நெகே. 6:15). இந்த வருடத்தில் 52 வாரங்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன; **அவைகளை ஞானமாய் பயன்படுத்தினால் தேவன் கைக்கூடிவரப்பண்ணுவார்.** முன்வைத்த காலை பின்வைக்காமல், தொய்ந்து போகாமல், சோர்ந்து போகாமல், பின் திரும்பாமல், பயமுறுத்தப்படாமல், திசை திருப்பப்படாமல், காரியத்திலேயே கண்கள் பதிக்கப்பட்டிருக்க நம்மை ஒப்புக்கொடுப்போம் (நெகே. 5:16).

என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதை மற்றவர்கள் காணட்டும் (நெகே. 2:8,18).

தேவன் சத்துருவின் ஆலோசனையை அபத்தமாக்க வல்லவர் என்பதனை அறிந்திருவோம் (நெகே. 4:15).

தேவன் நம் கைகளை திடப்படுத்தட்டும் (நெகே. 6:9).

தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார் என்பதனை அறிக்கை செய்து விசுவாசத்தில் நிலைத்திருப்போம் (நெகே. 4:20).

வார்த்தையை நிறைவேற்றாதவர்களை தேவன் உதறிப் போடுவார் என்பதனை மறவாதிருப்போம் (நெகே. 5:13).

தேவன் அனுப்பாதவர்களை அடையாளம் கண்டுகொள்வோம் (நெகே. 6:12).

தேவன் நம் மனதிலே செய்யும்படி வைத்ததனை நிறைவேற்றுவோம் (நெகே. 2:12).

தேவனுக்கே நம்முடைய காரியங்களைச் சொல்லுவோம் (நெகே. 1:4,5; 2:4; 4:4,9).

தேவனுக்குப் பயந்திருப்போம் (நெகே. 5:9,15).

தேவனே நாம் ஜனங்களுக்கு செய்வதற்குப் பதில் நன்மை தருவார் என எண்ணி ஓடுவோம் (நெகே. 5:10).

அப்பொழுது பரலோகத்தின் தேவனானவர் நம் காரியத்தினைக்

கைக்கூடி வரப்பண்ணுவார் (நெகே. 2:20).

இந்த வருடம் முழுவதும் இதுவே நம் நம்பிக்கையாக மாறட்டும்; செயலாக்கமாகட்டும். கடினங்கள் நம்மைக் கடந்து போகும். நம் ஓட்டம் தடைபடாது, சோர்வுகள் நம்மைத் தாக்காது, பொய்கள் நம்மைத் திசை திருப்பாது, சத்துருவும் வெட்கப்பட்டுப் போவான்.

வருட இறுதி ஊழியர் உபவாசக் கூட்டத்தில், ஆவிகளைப் பகுத்தறிதலைக் குறித்து தியானித்தோம், சுத்திகரிக்கப்பட்டோம், சுதாரித்துக் கொண்டோம். தேசத்தை சுதந்தரிக்கும் பெலத்தினை பெற்றுக் கொண்டோம். நான்காவது பத்தாண்டில் தேவன் செய்தவைகளை எண்ணி மகிழ்கிறோம். நான்காவது பத்தாண்டு என்பதனால், கர்த்தருக்குச் சித்தமானால் ஐந்தாவது பத்தாண்டில் செயலாக்க வேண்டியவைகளை தேவனிடம் பெற்றுக்கொள்ள ஊழியர் அனைவரையும் ஆயத்தப்படுத்தும் நேரமாயிருந்தது அது. பங்காளர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காகவும் ஜெபங்களை ஏறெடுத்தோம். **வரும் நாட்கள் கடின நாட்கள் ஆனால், கடமை செய்வதிலிருந்து அவை நம்மை கலங்கப்பண்ண பெலனற்றவையே.**

தேவன் பக்கம் நிற்போம் தேசத்தை சுதந்தரிக்க
தேவையற்ற அனைத்தையும் தாண்டிச் செல்ல
தேவனுக்குப் பயந்தவர்களும் திடன் கொண்டவர்களும் தேவை

பாழாக்கப்பட்டவைகளையும் பழசாகிப்போனவைகளையும்
பாதாள வல்லமை மேற்கொண்டதினால்
பாதுகாப்பற்றவைகளையும்
பார் ஆளும் பரமன் பலத்தில் மீட்க தேவ மனிதர் தேவை

தீர்க்கர்கள் திசை திரும்பிட பணம் உபயோகித்தோர்
தீவிரம் திக்கற்று திரிய பலன் உபயோகித்தோர்
தீங்கு செய்வோரின் முகம் நாணிட கிரியை செய்வோர் தேவை

ஆண்டவர் செயல்பட போட்ட பாரம் மனதில்
ஆள்பவர்களையும் திருப்பிட்ட அதிகாரம் கையில்
ஆண்டு முழுவதும் அவர் பக்கத்தில் ஓடுவோர் தேவை

அர்ப்பணிப்போம் இன்னும் அதிகமாய்
அகிலம் வென்றிடுவோம் முழங்காலில் நின்று
அவரே நன்மை அருளுவார் ஆண்டாண்டு காலம்.

அன்பரின் அறுவடைப் பணியில்

அன்பு சகோதரன்

D. அகஸ்டின் ஜெபக்குமார்

வஞ்சக ஆவி

சகோ. D.அகஸ்டின் ஜெபக்குமார்

கடைசி நாட்களில் நாம் வசிக்கின்றோம். வேத வசனத்திற்கு விரோதமான போதனைகளினால் பலர் வஞ்சிக்கப்பட்டு வீழ்ந்து போகும் இந்நாட்களில், ஆவிகளைப் பகுத்தறிய நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உலகத்தின் ஆவி, பாபிலோனின் ஆவி மற்றும் அந்திக் கிறிஸ்துவின் ஆவி சபை களுக்கு உள்ளாகவும் கிரியை செய்ய முடியும். விசுவாசிகளையும், ஊழியர்களையும் தன்வசப்படுத்தும்படிக்கும், வீழ்த்தும்படிக்கும் சத்துரு கிரியை செய்து வருகின்றான்; எனினும், அநேகரால் வஞ்சக ஆவிகளை அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை. அபிஷேகம் பெற்றவர்கள் கூட சாத்தானின் தந்திரங்களினால், வஞ்சகத்தினால் பிடிக்கப்படுகின்றனர்; ஆவிகளைப் பகுத்தறிவது நம்மை ஆபத்தினின்று பாதுகாக்கும்.

வீழ்த்தும் ஆயுதங்கள்

ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். (1தீமோ 4:1)

வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் மற்றும் பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுக்கிற ஜனங்கள் விசுவாசத்தினின்று விலகி விடுவது நிச்சயம். வஞ்சிக்கும் உபதேசங்களை கண்டுகொள்ள, பவுல் இரண்டு விதமான சொற்களை பயன்படுத்துகின்றார். முதலாவது மாய்மாலம்; உள்ளே ஒன்று வெளியிலே மற்றொன்று; இரண்டாவது **பொய்.** வைராக்கியமாக வாழும் தேவ ஜனங்களைக் கூட இந்த இரண்டும் வீழ்த்தி விடுகின்றன; எச்சரிக்கையாயிருப்போம்.

தாவீது சாலமோனை ராஜாவாக சிங்காசனத்தில் அமர்த்திய போது, தேவ கரம் சாலமோனோடு கூட இருந்தது. இத்தனை பெரிய கூட்டத்தை நியாயம் தீர்ப்பதற்கு ஞானம் வேண்டும் என கர்த்தரிடத்தில் வேண்டினான். அப்படியே, தேவன் அவனுக்கு ஞானத்தை மாத்திரமல்ல ஐசுவரியத்தையும் கூட கொடுத்து அவனைக் கனப்படுத்தினார் (1இரா 3:12,13). தேவ ஆசீர்வாதம் அவனது வாழ்வில் நிறைந்திருக்கின்ற வேளையில், ஆயிரம் ஸ்திரீகளை அவன் தனதாக்கிக்கொண்டான். எழுநூறு மனைவிகள் மற்றும் முன்நூறு மறுமனையாட்டிகள் சாலமோனுக்கு இருந்தார்கள்; அவர்களில், ஒரு ஸ்திரீ கூட யூத வம்சத்தைச் சேர்ந்தவள் இல்லை. அந்த ஸ்திரீகள் அவனுடைய இருதயத்தை தேவனை விட்டு வழிவிலகச் செய்தார்கள் (1இரா 11:3,4). மீண்டும் மீண்டும் தேவன் எச்சரித்துக் கொண்டேயிருந்தும், சாலமோன் செவிகொடுக்கவில்லை. எனவே, தேசம் இரண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டது. பத்து கோத்திரத்தார் ஒரு புறமும், மற்ற இரண்டு கோத்திரத்தார் மறுபுறம் இருந்தார்கள். சாலமோனுடைய மகன் ரெகோபெயாமுக்கு இரண்டு கோத்திரங்கள் மட்டுமே கிடைத்தன. சாலமோனுடைய வேலைக்காரன் யெரோபெயாமுக்கோ பத்து கோத்திரங்கள் கிடைத்தன.

தேவனுடைய ஆலயம் எருசலேமிலே இருந்தது. ஜனங்கள் எருசலேமிற்குச் சென்றால் தன்னை விட்டுவிடுவார்கள் என பயந்த யெரொபெயாம், எருசலேமிற்குச் சென்று ஆராதிப்பதை தடை செய்ய, தன்னுடைய இடத்திலே ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி வைத்தான்.

தேவனுடைய வார்த்தையின் மேல் தன்னை ஸ்திரப்படுத்தாத மனிதன், இப்படியே பயந்து வாழ்கிறான். தன்னுடைய பதவியைக் காப்பாற்ற எதையும் செய்ய ஆயத்தமாகி விடுகிறான். யெரொபெயாம் வேலைக்காரனாயிருந்த போது, தன்னுடைய தேசத்தை விட்டு அவன் ஓடியிருந்த நிலையில், தேவன் தீர்க்கதரிசியை அனுப்பி உனக்கு பத்து கோத்திரங்களைக் கொடுக்கிறேன் என்று சொன்னார். ஆனால், அவனோ கர்த்தருடைய வார்த்தையின் மேல் நம்பிக்கை வைக்கவில்லை; கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் அவனது வாழ்க்கை அமையவில்லை; எனவே, தன்னுடைய எதிர்காலத்தை நினைத்து பயப்படுகின்றான். இன்றும், அநேகரை தேவன் பெயரிட்டு ஊழியத்திற்கென்று அழைக்கின்றார்; ஆனால் அவர்களோ எதிர்காலத்தில் எனக்கு, என்னுடைய பிள்ளைகளுக்கு, குடும்பத்திற்கு என்ன நடக்குமோ என எண்ணி பயப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தன்னுடைய பதவியைக் காப்பாற்ற எதையும் செய்து விடுவார்கள். **“என்னை அழைத்தவர் தேவன், அவருடைய கிருபை என்மேல் இருக்கிறது, என்மேல் அவருடைய அபிஷேகம் இருக் கிறது” என்று நினைக்கிற மனிதன் பயப்பட மாட்டான், கவலைப்பட மாட்டான்.** எனவே தாவீது, “நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை” (சங். 37:25) என்று பாடுகின்றான்.

> “என்னை அழைத்தவர் தேவன், அவருடைய கிருபை என் மேல் இருக்கிறது, என் மேல் அவருடைய அபிஷேகம் இருக்கிறது என்று நினைக்கிற மனிதன் பயப்படமாட்டான், கவலைப்படமாட்டான்”
>
> “எதிர்காலத்தைக் குறித்து சிந்திப்பதினாலேயே அநேகருடை அஸ்திபாரங்கள் அசைகின்றன”
>
> “அபிஷேகம் பெற்ற வயதானவர்கள் வீழ்ந்துவிட்டால், வாலிபர்களை தேவன் வரவழைப்பார்”
>
> “வஞ்சிக்கப்பட்டவன்
>
> அழிக்கப்பட்டான், வஞ்சித்தவன் அழிக்கப்படவில்லை”
>
> “நம்முடைய அபிஷேகத்தை
>
> நாம் இழக்கும்போது, தேவன் அந்த இடத்தில் வேறொரு நபரை வைத்து கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்”
>
> “அபிஷேகம் பெருகினால்
>
> நம்மூலமாக தேவனது கிரியைகள் வெளிப்படும், நமக்கு விரோத மானவைகள் ஸ்தம்பித்து நிற்கும்”

அழைப்பிலே நாம் ஸ்திரமாயிருந்தால், எதிர்காலத்தைக் குறித்த பயம் உண்டாகாது; **எதிர்காலத்தைக் குறித்து சிந்திப்பதினாலேயே அநேகருடைய அஸ்திபாரங்கள் அசைகின்றன.** அழைப்பிலே, நீதியிலே நிலை நின்றால் நம்முடைய அஸ்திபாரம் அசையாது. “எதுவரைக்கும் உம்முடைய உத்தமத்திலே நிலைத்திருப்பீர்” என்று யோபுவின் மனைவி யும், நண்பர்களும் கேட்டபோது, தோலும், மாமிசமும் அழுகிப்போனாலும் நான் நீதியிலே நிலைத்திருப்பேன் என்று யோபு சொன்னானே.

வஞ்சிக்கப்பட்ட வாலிபன்

யெரொபெயாம் தூபங்காட்ட பலிபீடத்ண்டையிலே நிற்கையில், இதோ,

தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே, யூதாவிலிருந்து பெத்தே லுக்கு வந்து, அந்தப் பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி, அன்றையதினம் **அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லி, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான்.** (1இரா 13:1-3)

வேலைக்காரனாயிருந்த யெரொபெயாமை தேவன் உயர்ந்த பதவி யிலே வைத்தார்; ஆனால், அவனோ தான் உயர்த்தப்பட்டதை மறந்து, கன்று குட்டியை உண்டாக்கி பலி செலுத்தத் தொடங்கி விட்டான். பலிபீடத்தைக் கட்டி தூபமிட அவன் நின்றபோது, வாலிபனான ஒரு தீர்க்கதரிசியை தேவன் அனுப்புகின்றார். யெரொபெயாம் இருந்த இடத்தில் வயதான ஒரு தீர்க்கதரிசி இருந்த போதிலும், அவரைத் தள்ளி யூதாவிலிருந்து தீர்க்கதரிசியை தேவன் அனுப்புகின்றார். **நம்முடைய அபிஷேகத்தை நாம் இழக்கும் போது, தேவன் அந்த இடத்தில் வேறொரு நபரை வைத்து கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார். அபிஷேகம் பெற்ற வயதான வர்கள் விழ்ந்து விட்டால், வாலிபர்களை தேவன் வரவழைப்பார்.** யெரொபெயாம் இருந்த இடத்தில் இருந்த கிழவனான தீர்க்கதரிசி அபிஷே கத்தை இழந்திருந்தான்; எனவே, தேவன் அவனைப் பயன்படுத்தவில்லை. யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வாலிபனான ஒரு தீர்க்கதரிசியை தேவன் அனுப்புகின்றார். அந்த **வாலிபன் ராஜாவைக் கண்டு பயப்படவில்லை,** அவன் ராஜாவை நோக்கி தீர்க்கதரிசனம் உரைத்த போது, **வார்த்தையோடு கிரியையும் அங்கே வெளிப்பட்டது.** தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து, சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டு போயிற்று (1இரா 13:5).

பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராக அவன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது, அவனைப் பிடியுங்கள் என்று தன்கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று (1இரா. 13:4). அந்த வாலிபனிடத்தில் அத்தனையாய் அபிஷேகம் காணப்பட்டது. அபிஷேகத்தை நாம் இழந்துவிடக் கூடாது, பெற்ற அபிஷேகத்தில் நாம் பெருக வேண்டும். அபிஷேகம் இருந்தால், பயம் இராது, எந்த காரியத்தையும் எவருக்கும் பயப்படாமல் சொல்ல முடியும். அபிஷேகத்தின் அளவினை வாழ்வில் கூட்ட வேண்டும், அபிஷேகம் பெருகினால் தேவனது கிரியைகள் நம்மூலமாக வெளிப்படும், நமக்கு விரோதமானவைகள் ஸ்தம்பித்து நிற்கும்.

அந்த வாலிபனின் வாயிலே வலுவான தேவனுடைய வார்த்தை காணப்பட்ட போதிலும், அவனுடைய **இருதயம் இரக்கம் நிறைந்ததாயிருந்தது;** அவனுக்கு விரோதமாயிருக்கிறவர்களும் துக்கமாயிருப்பதை விரும்பாத வாலிபன் அவன்; எனவே, ராஜாவின் கை குணமாக வேண்டுதல் செய்தான். மோசேக்கு விரோதமாய் மிரியாம் பேசின போது, அவள் குஷ்டரோகியானாள் (எண். 12:10); மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான் (எண். 12:13). இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட போது, பேதுரு பிரதான ஆசாரி யனுடைய வேலைக்காரனின் காதை வெட்டிய போது (மத். 26:51), வெட்டப்பட்ட

காதினை இயேசு எடுத்து, அதனை மீண்டும் ஒட்டவைத்து அவனை சுகமாக்கினார்; நாமும் அவரைப் போல வாழ வேண்டும். நாம் வலுவாகப் பிரசங்கிப்பவராக இருக்கலாம், ஆனால், நம்முடைய இருதயம் எப்படி இருக்கிறது? மிருதுவாகவா அல்லது கல்லைப் போலவா?

ராஜாவின் கரம் குணமான போது, ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன் என்றான். தேவனுடைய மனுஷன் ராஜாவை நோக்கி: நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை; இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை. ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொல்லி, அவன் பெத்தேலுக்கு வந்த வழியாய்த் திரும்பாமல், வேறுவழியாய்ப் போய் விட்டான் (1இரா 13:7-10). ஒரு புறம் தேவனுடைய கட்டளை, மற்றொரு புறம் ராஜாவின் அழைப்பு; என்ற போதிலும் இந்த சோதனை அந்த வாலிபனை அசைக்க முடியவில்லை. ராஜாவின் வெகுமதியை அவன் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படியும் வைராக்கியம் அவனுக்குள் காணப்பட்டது. அபிஷேகம் அவனில் நிறைந்திருந்தது; பணத்திற்கு அவன் ஆசைப்படவில்லை.

அபிஷேகம் இழந்தவர்களால் வரும் ஆபத்து

கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருந்தான்; அவன் குமாரர் வந்து தேவனுடைய மனுஷன் அன்றைய தினம் பெத்தேலிலே செய்த எல்லாச் செய்கைகளையும், அவன் ராஜாவோடே சொன்ன வார்த்தைகளையும் தங்கள் தகப்பனுக்கு அறிவித்தார்கள். (1 இரா. 13:11)

அதற்கு அவன்: **உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான்.** (1 இரா 13:18)

அபிஷேகத்தை இழந்த தீர்க்கதரிசிகளைக் குறித்து, ஊழியர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவர்கள் நம்மை தேவ வார்த்தைக்கு விரோதமாகத் திசை திருப்பி விடுவார்கள். யெரோபெயாமுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்ன வாலிபனைப் பார்த்து கிழவனான தீர்க்கதரிசி, **'உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்'** என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றான். வாலிபன் கிழவனான தீர்க்கதரிசியைப் பார்த்து, "உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்" என்று சொல்லியிருக்க வேண்டும், ஆனால் இங்கே தலை கீழாக நடக்கிறது; ஏனென்றால், அந்த கிழவனான தீர்க்கதரிசி அபிஷேகத்தை இழந்திருந்தான்.

இத்தனை குணங்களைக் கொண்ட மனிதனாக அந்த வாலிபன் காணப்பட்ட போதிலும், அந்த வாலிபன் அசைக்கப்பட்டுப் போனான். தேவனால் **நேரடியாகக் கொடுக்கப்பட்ட வசனம் அந்த வாலிபனிடத்தில் இருந்த போதிலும்,** கிழவனான தீர்க்கதரிசி, **"தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான்'** என்று பொய் சொன்ன போது அவன் அதனை நம்பி வஞ்சிக்கப்பட்டுப் போனான். நம்முடைய கரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற வேதாகமத்திற்கு விரோதமாக, கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக தூதன் எதையும் பேசிவிட முடியாது.

இந்த வாலிபனிடத்தில் வைராக்கியம் இருந்தது, ஒப்புக்கொடுத்தல் காணப்பட்டது, பண ஆசை அற்றவனாயிருந்தான்; ஆனால், ஆவியை பகுத்தறியும் சக்தியோ அவனிடத்தில் இல்லாதிருந்தது. கிழவ னான தீர்க்கதரிசி, அந்த வாலிபன் மேல் கரிசனையாய் இருப்பவனைப் போல நடித்து மாய்மாலமான, பொய்யான வார்த்தைகளைச் சொன்ன போது இந்த வாலிபன் விழுந்து போனான். பொய்யான தீர்க்கதரிசியின் வார்த்தையை கேட்டதினால் சிங்கம் அவனைக் கொன்று போட்டது. **வஞ்சிக்கப்பட்டவன் அழிக்கப்பட்டான், வஞ்சித்தவன் அழிக்கப்படவில்லை.**

எனவே பவுல், **வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்** (கலா 1:7,8) என்று எழுதுகின்றார்.

வஞ்சிக்கிறவனைக் காட்டிலும் வஞ்சிக்கப்படுகிறவர்களே ஆபத்தில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். எழுதப்பட்ட வசனத்திற்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும். எழுதப்பட்டிருக்கிற வசனத்தைக் கொண்டே இயேசு சாத்தானை ஜெயித்தார். "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது" என்று பிசாசு சொன்ன போது (மத் 4:6), உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக் கிறதே (மத் 4:7) என்று எழுதப்பட்ட வசனத்தைக் கொண்டே இயேசு பிசாசை ஜெயித்தார். எழுதப்பட்டு நமது கரங்களில் கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கு மேலானது எதுவுமில்லை. வசனத்திற்கு விரோதமானவைகள் பெருகிவருகின்ற நாட்கள் இது. சபைகளில் வசனத்திற்கு விரோதமாக எழும்பும் காரியங்களை, போதிக்கப்படும் செய்திகளை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

வஞ்சிக்கப்பட்ட கூட்டம்

மனிதனால் மனிதன் வஞ்சிக்கப்படுவது போலவே, ஒரு தலைவர் களின் கீழாகக் காணப்படும் கூட்டமும் மற்றொரு கூட்டத்தினரால் வஞ்சிக்கப்பட்டுப் போகின்றது. வலுவான கிரியைகளின் மூலமாக தேவன் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரை அழைத்துக் கொண்டு வந்தார். மோசேயின் மூலமாக அநேக அற்புதங்களைக் காண்பித்தார். நாற்பது வருடங்கள் அவர்களை வனாந்தரத்தில் நடத்தினார். அவர்களுக்குள் இருந்த அவிசுவாசம், துன்மார்க்கம், கீழ்ப்படியாமையினால், யோசுவா மற்றும் காலேப் ஆகிய இரண்டு பேரைத் தவிர புறப்பட்டு வந்த அனைவரும் வனாந்தரத்தில் அழிந்து போனார்கள். முப்பத்திரண்டு இலட்சம் பேரை தேவன் அழைத்துக் கொண்டுவந்த போதிலும், புறப்பட்டவர்களில் இரண்டு பேர் மாத்திரமே கானானுக்குள் பிரவேசித்தனர். மோசே மரித்ததால், யோசுவா ஜனங்களை கானானுக்குள் நடத்திக்கொண்டு போனான். **யோசுவா தேவனுக்கு முன்பாக உண்மையும், உத்தமுமான ஊழிய னாகக் காணப்பட்டான்;** தேவனும் அவனோடே கூட இடைபட்டு ஜனங்களை நடத்திவந்தார். யோசுவா எகிப்தையும், கானானையும் பார்த்துவிட்டான். எகிப்திலிருந்து ஜனங்கள் புறப்பட்டபோது, வழியில் நடந்த **யுத்தங்களில்**

வெற்றியைக் கொண்டுவந்து கொடுத்தவன் யோசுவா; அமலேக்கியர்களை அவன் முறியடித்துப்போட்டான். நாநூறு வருடங்கள் அடிமையாயிருந்ததினால், இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தம் செய்ய பழக்கமில்லாதிருந்தார்கள். "ஜனங்களை அழைத்துக்கொண்டு நீ போய் யுத்தம் பண்ணு" என்று யோசுவாவினிடத்தில் மோசே சொன்ன போது, அவன் சென்று வெற்றியைக் கொண்டு வந்தான்; அதற்காக மோசே ஜெபித்துக்கொண்டிருந்தான். ஜெபத்தின் மூலமாக சத்துருக்களை முறியடிக்க முடியும் என்பதை யோசுவா அறிந்திருந்தான். மோசே மலையில் தேவனைச் சந்திக்க ஏறிச் செல்லும் போது, யோசுவாவும் அவனோடே கூட பாதி தூரம் வரை சென்றான். தேவனோடு பேசிவிட்டு இறங்கி வரும்போது மோசேயின் முகம் பிரகாசிக்கிறதை யோசுவா அறிந்திருந்தான். **ஜெபத்தின் வல்லமையை அறிந்தவன்** மாத்திரமல்ல, கர்த்தர் மனிதனோடு எப்படி பேசுகின்றார் என்பதையும், அதனால் மனிதன் முகத்தில் உண்டாகும் பிரகாசத்தையும் யோசுவா அறிந்திருந்தான். **தேவனோடு தரித்திருப்பதை யோசுவா அறிந்தவன்.**

> "தேவனுடைய வார்த்தையின் மேல் தன்னை ஸ்திரப்படுத்தாத மனிதன், பயந்து வாழ்கிறான்"
>
> "பயப்படுகிறவர்கள் தங்கள் பதவியைக் காப்பாற்ற எதையும் செய்வார்கள்"
>
> "அபிஷேகத்தை இழந்தவர்கள் தேவ வார்த்தைக்கு விரோதமாக ஜனங்களை திசை திருப்பிவிடுவார்கள்"
>
> "எழுதப்பட்டு நமது கரங்களில் கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கு மேலானது எதுவுமில்லை"
>
> "வெளியில் நடக்கும் காரியங்கள், தேவ ஆலோசனைக்கு நாம் காத்திராமல், தீர்மானங்களை எடுக்க நம்மை உந்தித் தள்ளாதபடிக்கு நாம் கவனமாயிருக்கவேண்டும்"
>
> "தேவனது பெயரைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றுகிறவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்"
>
> "முறுமுறுப்பு குழுவின் ஒருமனதை உடைத்துப்போடும்"

யோசுவா **கீழ்ப்படியக் கற்றுக்கொண்டவன்.** மோசே ஒருமுறை 70 தலைவர்களை அழைத்தான்; அவர்களில் இரண்டு பேர் வரவில்லை; தான் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதைப்போல, அந்த எழுபது பேரும் நிரப்பப்பட வேண்டும் என்று மோசே வேண்டினான். அந்த எழுபது பேர் மேலும் ஆவியானவர் இறங்கினதுடன், வராமல் கூடாரத்தில் இருந்துவிட்ட இரண்டு பேர் மேலும் ஆவியானவர் இறங்கினார். இதனை யோசுவாவினால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அவர்களை தடை பண்ணும்படி மோசேயினிடத்தில் சொன்னான். கீழ்ப்படியாதவர்களை யோசுவாவினால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. யோசுவா கானானுக்குச் சென்று வேவு பார்த்தபோது, ஜனங்களுக்கு நற்செய்தியினைச் சொன்னான்; **அவன் தேவ கரத்தின் வல்லமையை அறிந்தவன்.** யோசுவாவும், காலேபும் தேவ வல்லமையை சத்துருவின் தேசத்தில் கண்டவர்கள். பத்து பேர் எதிர்மறையான காரியங்களைச் சொன்ன போதிலும், யோசுவாவும் காலேபும் சரியானவைகளை அறிவித்தார்கள்.

மோசே மரித்த போது, தேவன் யோசுவாவை நோக்கி, "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை", பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய். (யோசு 1:5-6)

என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; **நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக.** இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய் (யோசு. 1:7-8) என்று சொன்னார்.

நியாயப்பிரமானத்தை விட்டு விலகாமல், அதன்படி செய்யக் கவனமாயிருக்க வேண்டும் என்ற ஒரு காரியத்தையே தேவன் யோசுவாவினிடத்தில் எதிர்பார்த்தார். **யோசுவா தேவனிடத்தில் ஒருபோதும் விவாதித்ததில்லை.** யோர்தான் தண்ணீரிலே ஆசாரியரின் கால்கள் படும்போது அது வழிகொடுக்கும் என்று தேவன் சொன்னபோது, யோசுவா சந்தேகப்படவில்லை; **விசுவாசத்தில் அவன் திடமாயிருந்தான்.** எரிகோ பட்டணத்தைச் சுற்றிவரும்படி தேவன் சொன்னார். யோசுவாவோ யுத்த வீரன், ஆனால் தேவன் சுற்றிவரும்படி சொன்னபோது, அவன் அதனை ஏற்றுக்கொண்டு கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சுற்றி வந்தான். அவன் மேலும் முன்னேறிச் செல்லும் போது, ஆயி பட்டணத்தில் ஒரு மனிதனின் தவற்றின் நிமித்தமாக அனைவரும் தோல்வியைத் தழுவினார்கள். யோசுவா தேவ சமூகத்தில் தரையில் விழுந்து கிடந்தான்; **தன்னைத் தாழ்த்தக் கற்றுக்கொண்டவன்**. தேவன் காரணத்தைச் சுட்டிக் காட்டின போது, அதனை அவன் நீக்கிப்போட்டான். **தேவனுக்காக அவன் வைராக்கியம் பாராட்டுகின்றவன்.** ஆனாலும், யோசுவா நடத்திச் சென்ற கூட்டம் மற்றொரு கூட்டத்தினரால் வஞ்சிக்கப்பட்டது.

வஞ்சகர்களோடு உண்டான உடன்படிக்கை

அப்பொழுது இஸ்ரவேலர்: கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் அவர்களுடைய போஜனபதார்த்தத்தில் சிறிது வாங்கிக்கொண்டார்கள். யோசுவா அவர்களோடே சமாதானம் பண்ணி, அவர்களை உயிரோடே காப்பாற்றும் உடன்படிக்கையை அவர்களோடே பண்ணினான்; அதற்காகச் சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்கள். (யோசு. 9:14-15)

எல்லா ஜாதிகளையும் அழித்து விட்டு தேசத்தை சுதந்தரிக்க வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் ஆணையிட்டிருந்தார். இன்றைய நாட்களில் நாம் மனிதர்களுக்கு விரோதமாக அல்ல, அவர்களுக்குப் பின்னால் கிரியை செய்யும் கிரியைகளுக்கு விரோதமாக யுத்தம் செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஜனங்களை வஞ்சிக்கிற ஆவிகளுக்கு விரோதமாக நாம் யுத்தம் செய்ய வேண்டும். கானானை சுதந்தரிக்கும் முன்னதாக, அங்குள்ள தேவனுக்குப் பிரியமற்றவைகளை அழித்துப் போட தேவன் அறிவுறுத்தியிருந்தார். அப்பொழுது கிபியோனியர் அங்கே இருந்தார்கள்; தேவ ஜனங்களின் வெற்றியை அவர்கள் கேள்விப்பட்ட போது, தாங்கள் அழிக்கப்படும் முன்னதாக **இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளும்படிக்கு நாடகமாடினார்கள்.** கிழிந்த ஆடை, பிய்ந்து போன செருப்பு, கிழிந்த பை மற்றும் கெட்டுப்போன ரொட்டி ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வந்தார்கள். தூர தேசத்திலிருந்து வருவதைப் போல தங்களைக் காட்டிக் கொண்டார்கள். இஸ்ரவேலரைக் குறித்த பயமே அவர்களை அப்படிச் செய்ய வைத்தது.

மாய்மாலமான விதத்திலாவது எப்படியாகிலும் அவர்களோடு கூட உடன்படிக்கை செய்ய அவர்கள் எத்தனித்தார்கள். ஆனால், இந்த மனிதர்கள் வந்தபோது யோசுவாவும் அவனது கூட்டத்தினரும் இந்தக் கூட்டத்தினரால் வஞ்சிக்கப்பட்டுப் போனார்கள். **ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரை வஞ்சித்து விட்டனர்.**

ஒரு தனி மனிதன் இன்னொரு தனி மனிதனை வஞ்சித்து விடுகின்றான். அப்படியே ஒரு கூட்டத்தினரும் இன்னொரு கூட்டத்தினரை வஞ்சித்து விடுகின்றனர். இன்றைய நாட்களில் தலைவர்கள், சபைகள் தேவனுக்குப் பிரியமற்றவைகளோடு ஒத்துப்போனதினால், பலர் வஞ்சிக்கப்பட்டு விட்டனர். பேசுபவர்களின் வெளித் தோற்றத்தையே யோசுவாவும் அவனோடிருந்தவர்களும் கண்டார்கள்; **மிக முக்கியமான தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் அவர்கள் காணப்பட்ட போதிலும், தேவ ஆலோசனைக்கு அவர்கள் காத்திருக்கவில்லை.** காணப்படுகின்ற காரியங்களின் மேல் மனதை வைத்து தீர்மானம் எடுப்பதினால் நாம் வஞ்சிக்கப்படக்கூடும். கண்ணீர், சூழ்நிலைகள், அழுத்தங்கள், வேண்டுதல்களோ தேவனை விட்டு நம்மைப் பிரித்து, தீர்மானங் களிலிருந்து நம்மை விலக்கி நம்மை வஞ்சித்துவிடும். தேவன் நம்மை உயர்ந்த இடத்தில் வைக்கும்போது, காணப்படுகின்ற காரியங்களின் மேல் மனம் வைத்து வஞ்சிக்கப்படாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருப்போம். யோசுவாவும் அவனோடு கூட இருந்த தலைவர்களும் அவர்களுடைய நடிப்பினால் வஞ்சிக்கப்பட்டுப் போனார்கள். **வெளியில் நடக்கும் காரியங்கள், தேவ ஆலோசனைக்கு நாம் காத்திராமல், தீர்மானங்களை எடுக்க நம்மை உந்தித் தள்ளாதபடிக்கு நாம் கவனமாயிருக்க வேண்டும்.**

இஸ்ரவேலர்: கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் அவர்களுடைய போஜன பதார்த்தத்தில் சிறிது வாங்கிக்கொண்டார்கள் (யோசு. 9:14). உம்முடைய தேவ னாகிய கர்த்தருடைய நாமத்தின் பிரஸ்தாபத்தைக் கேட்டு, உமது அடியாராகிய நாங்கள் வெகு தூரதேசத்திலிருந்து வந்தோம்; அவருடைய கீர்த்தியையும், அவர் எகிப்திலே செய்த யாவையும், (யோசு. 9:9) கேள்விப்பட்டுதான் உங்களைப் பார்க்க வந்தோம் என்றே வஞ்சிக்க வந்த கூட்டத்தினர் சொன்னார்கள். தங்களைக் காப்பாற்ற தேவனது பெயரைப் பயன்படுத்துகிறார்கள். **தேவனது பெயரைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றுகிறவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.** யோசுவா இந்த விஷயத்தில் சறுக்கி விட்டான். இதினிமித்தமாக ஜனங்களுக்குள் முறுமுறுப்பு உண்டாயிற்று. சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்பேரில் ஆணையிட்டிருந்தபடியினால், இஸ்ரவேல் புத்திரர் அவர்களைச் சங்காரம்பண்ணவில்லை; ஆனாலும் சபையார் எல்லாரும் பிரபுக்கள்மேல் முறுமுறுத்தார்கள் (யோசு. 9:18). நமக்குக் கீழே இருக்கிற ஜனங்கள் முறுமுறுப்பதற்கு, வெளிப்புறமாதெஅய் தோன்றுகிற காரியங்களின் மேல் நாம் தீர்மானம் எடுப்பது ஒரு காரணமாக அமையலாம். **முறுமுறுப்பு குழுவின் ஒருமனதை உடைத்துப்போடும்.** தங்கள் குழுவினரை சந்தோஷமாக வைப்பதற்கு அநேக தலைவர்களுக்கு பெலனில்லை. சூழ்நிலைகளினால், கண்ணீரினால் அநேக தலைவர்கள் இழுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். இந்த வஞ்சகத்தினால், வருங்கால சந்ததி பாதிப்புக்குள்ளானது.

தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது; அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமுகத்தில் விசாரித்தான். கர்த்தர்: கிபியோனியரைக் கொன்று போட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று என்றார். (2 சாமு. 21:1)

யோசுவானின் கூட்டத்தினர் வஞ்சிக்கப்பட்டதினால், அவர்கள் செய்த தவறு பின் சந்ததியையும் பாதித்தது. தாவீதின் நாட்களில் மூன்று வருடங்கள் பஞ்சம் உண்டான போது, தாவீது தேவனிடத்தில் விசாரித்தான். பல சந்ததிகள் கடந்து சென்றபின்பும், யோசுவாவின் கூட்டத்தினர் உடன்படிக்கை செய்திருந்த **கிபியோனியரின் நிமித்தமாக, நல்ல தலைவனின் கீழ் இருந்த கூட்டமும் பாதிக்கப்பட்டது.** தேவ ஆலோசனையை கேட்காமல் ஒத்துப்போனால், தலைமுறை தலைமுறையாக முள்ளையே நாம் வைத்து விட்டுச் செல்லுவோம்.

எகிப்து தேசத்திலிருந்து ஜனங்களை விடுவித்து, சிவந்த சமுத்திரத்தை தாண்டிச் செல்லும் வரைக்கும் **"கர்த்தர் மோசேயை நோக்கி"** (யாத். 6:1; 7:1; 8:1; 9:1; 10:1; 11:1; 12:1; 13:1; 14:1) என்று வாசிக்கின்றோம்; கர்த்தருடைய ஆலோசனையைப் பெறாமல் மோசே ஒன்றையும் செய்யவில்லை. **கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு கேட்டு செயல்பட்டதினாலேயே, மோசே வல்லமையான காரியங்களைச் செய்தான்.** கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு செயல்பட்டால், சபைக்கு, ஸ்தாபனத்திற்கு நாம் ஆசீர்வாதமாக மாறுவோம்.

இப்புதிய ஆண்டில் வஞ்சிக்கப்படாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்வோம்; உறுதியான ஊழியர்களாக, வேத வசனத்தைப் பற்றிக்கொண்டவர்களாக, தேவ ஆலோசனைகளைப் பெற்று, அவருக்குக் காத்திருந்து ஊழியத்தினைத் தொடருவோம். வேத வசனத்தை சுமந்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவோம்.

ஊழியர் உபவாசக் கூடுகை

ஜெம்ஸ் ஊழியர்களின் வருடாந்தர உபவாசக் கூடுகை கடந்த ஆண்டு, டிசம்பர் 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று தினங்கள் பீஹார், ஜெம்ஸ் வளாகத்தில் அமைந்துள்ள ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. வட இந்தியாவின் அனைத்து பணித்தளங்களில் பணியாற்றும் ஜெம்ஸ் மிஷனரிகள் அனைவரும் குடும்பமாக இக்கூடுகையில் பங்கேற்றனர். மேலும், தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த ஜெபப்பங்காளர்களும் இக்கூடுகையில் கலந்துகொண்டனர். **"ஆவிகளை பகுத்தறிதல்"** என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டு நடைபெற்ற இக்கூடுகையின் சிறப்பு செய்தியாளர்களாக, சகோ. **பால் ராதாகிருஷ்ணன்** (Director, Mahanaim Ministries, Kovilpatti, Tamilnadu) மற்றும் சகோ. **ராபட் சைமன்** ஆகியோர் (Chennai) அழைக்கப்பட்டிருந்தனர். பாபிலோனின் ஆவி, அந்திக் கிறிஸ்துவின் ஆவி மற்றும் வஞ்சிக்கிற ஆவி என்ற தலைப்புகளின் கீழ் சகோ. ராபட் சைமன் கர்த்தரின் வசனத்தைப் பிரசங்கித்தார். அத்துடன், உலகத்தின் ஆவி, யேசபேலின் ஆவி மற்றும் சத்திய ஆவி என்ற தலைப்புகளின் சகோ. பால் ராதாகிருஷ்ணன் செய்தியளித்தார். கடைசிநாட்களில் ஊழியர்கள் தங்களை வஞ்சிக்கப்படாமல் காத்துக்கொள்ளவேண்டும் என்ற செய்திக்கு ஒவ்வொரு ஊழியர்களும் தங்களை அர்ப்பணித்து ஜெபித்தனர். ஒவ்வொரு நாள் காலை தியானத் தின் போது "வஞ்சிக்கப்பட்ட வாலிபன், வஞ்சிக்கப்பட்ட கூட்டம்" என்ற தலைப்பின் கீழ் சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** கொண்டு வந்த காலை தியானச் செய்தி, கடைசி நாட்களில் ஊழியர்கள் வஞ்சிக்காதபடிக்கு தங்களைக் காத்துக் கொள்ள விடுக்கப்பட்ட எச்சரிப்பின் சத்தமாக இருந்தது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் நடைபெற்ற குழு கலந்துரையாடல்கள்,

ஊழியர் உபவாசக் கூடுகை 2011

செய்திகளின் கருத்துக்களை கலந்து ஆராயவும், தங்களை சரிசெய்து கொள்ளவும் வழிவகுத்தது. பல்வேறு ஜெபக் குறிப்புகளுக்காகவும் ஊழியர்கள் இணைந்து ஜெபித்தனர்.

கூடுகையின்போது, ஜெம்ஸ் தெபோராள் வேதாகமப் பள்ளியில் பயிற்சியினை நிறைவு செய்த மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தலைவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்க சகோ. பால் ராதாகிருஷ்ணன் சான்றிதழ்களை வழங்கினார். சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** அளித்த கொலோசெயர் நிருபத்தின் தியானங்கள் அடங்கிய DVD மற்றும் ஞாயிறு பள்ளி ஊழியத்தின் பயிற்சி புத்தகங்களும் ஜெபத்துடன் வெளியிடப்பட்டன. 29 அன்று மாலை நடைபெற்ற கர்த்தரின் பந்தியில் ஊழியர்கள் அனைவரும் பங்கேற்றனர்; தொடர்ந்து சகோதரர் **அகஸ்டின் ஜெபக்குமார்** இறுதி செய்தியினை வழங்கி ஊழியர்களை அர்ப்பணிப்பிற்குள் நடத்தி கூடுகையினை நிறைவு செய்தார். குளிர்காலமாயிருந்த போதிலும், ஆவியின் அனல் ஊழியர்கள் ஒவ்வொருவரையும் கூடுகையில் உற்சாகமாக பங்கேற்கச் செய்தது.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

2011-ம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு தின சிறப்பு நிகழ்ச்சிகள் சிக்காரியாவிலுள்ள ஜெம்ஸ் ஆடிட்டோரியத்தில் டிசம்பர் 23 அன்று நடைபெற்றது. ஜெம்ஸ் காப்பகச் சிறுவர்கள், செவிலியர் பள்ளி மாணவியர் மற்றும் சுமார் 4000 ஜெம்ஸ் ஆங்கில மற்றும் ஹிந்தி பள்ளி மாணவ மாணவியர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அத்துடன், மாணவர்களின் பெற்றோர்களும் மற்றும் ஜெம்ஸ் ஊழியர்களும் குடும்பமாக கலந்து கொண்டனர். ஆங்கிலம் மற்றும் ஹிந்தி பள்ளி மாணவ மாணவியர்களிடையே இணைப்பு பாலத்தை உருவாக்கும் விதத்தில் கிறிஸ்மஸ் விழா அமைந்தது. குறுநாடகங்கள், நடனங்கள், மற்றும் பாடல்கள் என அனைத்து நிகழ்ச்சிகளும் கண்களுக்கு விருந்தாக அமைந்ததுடன், கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தையும் நினைப்பூட்டின. சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** கிறிஸ்மஸ் செய்தியினை வழங்கினார். விழாவின் சிறப்பு அம்சமாக, சிக்காரியா ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவரும், சிக்காரியா மற்றும் நிம்மியாடி பணித்தளங்களிலுள்ள ஹிந்தி பள்ளிகளின் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு கம்பளி போர்வையினை கிறிஸ்மஸ் பரிசாக வழங்கி தங்கள் அன்பினைப் பகிர்ந்து கொண்டனர்.

2012-ன் புத்தாண்டு ஆராதனை டிசம்பர் 31 இரவு 10:30 மணி முதல் அதிகாலை 1 மணி வரை நடைபெற்றது. சகோதரர் **அகஸ்டின் ஜெபக்குமார்** புத்தாண்டு செய்தியினைப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து மாலையில் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சிறுவர்களுக்கு விளையாட்டுகளும், 13-19 வயதிற்குட்பட்டவர்களுக்கு யாக்கோபு நிருபத்திலிருந்து வேத வினா போட்டிகளும் நடத்தப்பட்டன. ஊழியர்கள் ஒன்பது குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவினரும் ஆவியின் கனிகளை நாடகமாக நடித்துக் காண்பித்தனர். சிறப்பாக நடித்த குழுவினருக்கும் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கு சகோதரி **ரூபலேகா ஜெபக்குமார்** மற்றும் சகோ. **அகஸ்டின் ஜெபக்குமார்** ஆகியோர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். ஊழியர்கள் தங்கள் வீடுகளிலிருந்து இனிப்புகள் மற்றும் பலகாரங்களைக் கொண்டுவந்து அனைவரும் பகிர்ந்து உண்டது ஐக்கியத்தையும், அன்பினையும் புத்தாண்டில் பெருகச் செய்தது.

பணித்தளச் செய்திகள்

(ஜனவரி - 2012)

ரோஹ்தாஸ் கோட்டம்

ஜனவரி 15

தன்ஸா

பட்கா, புத்வா, ரேடியா, பலுவாஹி, கபர்பூர் மற்றும் இப்பணித்தளத்திலும் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுமார் 160 பேர் முதன் முதலாக சுவிசேஷ நற்செய்தியைக் கேட்டனர். ஆர்வமுள்ளவர்களுக்கு சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டது. தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் தேவ பிரசன்னத்தால் ஆட்கொள்ளப்படவும், இப்பகுதியில் செயல்பட்டு வருகிற பகல் பாதுகாப்பு மையம் வாயிலாக அநேக மாணவ, மாணவிகள் உருவாக்கப்படவும் ஜெபியுங்கள்.

தெல்கப்

கடந்த 1 வருடமாக செயல்பட்டு வருகிற இப்பணித்தளத்தில் விசுவாசியின் வீட்டில் வைத்து ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. 20 விசுவாசிகள் ஆராதனையில் கூடுகிறார் கள். சிறுவர் மத்தியில் வசனம் விதைக்கப்பட்டு வருகிறது. இப்பணித்தள சபை விருத்தி அடையவும், கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள இப்பணித்தள ஊழியர் வினோத்தின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 16

தும்பா

ரோப்ஹதா, ரம்ஜித்கஞ்ச், கர்மா, ஜலில்பீஹா மற்றும் இப்பணித்தளப் பகுதி யிலும் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த வசந்தாகுமாரி, மனநிலை பாதிக்கப்பட்டிருந்த தேவந்திதேவி ஆகியோரின் விடுதலைக்காக ஜெபித்த போது தேவன் இருவருக்கும் அற்புத விடுதலையைக் கொடுத்தார். துதியுங்கள்! இப்பகுதி பகல் பாதுகாப்பு மையத்தில் படித்து வருகிற மாணவ, மாணவியர்களுக்காகவும், படித்துக் கொடுக்கிற ஆசிரியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

கோராஸ்

ரோஹ்தாஸ் மலைப்பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக இப்பணித்தள சபை வாயிலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆராதனையில் வாலிபர்கள் அதிக மாக கலந்து கொள்கின்றனர். ஞாயிறு மாலை ஆராதனை சுன்ஹட்டாவில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 20 பேர் கலந்து கொள்கின்றனர். ஜெய்ராம் என்ற இயக்கத்தினர் மத்தியில் இயேசுதாம் கிரியை செய்யவும், இப்பகுதியைச் சேர்ந்த உராவன், கர்வார், யாதவ் இன மக்கள் பாவத்திலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 17

சடக்கி

பட்வானியா, காந்தா, சரோதாஹ் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. சிறுவர்களுக்காக ஞாயிறு பள்ளி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தலை வலியினால் பாதிக்கப்பட்ட சுனித்தா என்ற சகோதரி அநேக மருத்துவ சிகிச்சைப் பெற்றும் சுகமாகாமல் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார். லாக்பத்தி என்ற சகோதரியின் மகளுக்கும் தேவன் சரீர சுகத்தைக் கொடுத்தார். இப்பகுதியில் ஆலயம் சொந்தமாக கட்டப்படவும், சிவ்சர்ச்சா அமைப்பினர் மனந்திரும்பவும் ஜெபியுங்கள்.

செயின்புரா

பஞ்மாகுல், அதௌரா பகுதியில் ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. சுவிசேஷம்

அறிவிக்கப்பட்ட கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. லால்பாபு என்பவருக்கு நீண்டநாட்களாக இருந்து வந்த கைவலி ஜெபத்தால் சுகமானது. 2 வயதான பகதூர் என்பவரின் மகளின் வியாதி படுக்கையை தேவன் மாற்றிப் போட்டார். ரமா-தேவி, சுனித்தாதேவி அசுத்த ஆவியின் கிரியையிலிருந்து விடுதலை பெறவும், சிறுவன் ஜிப்ராம்குமார், பகாமனியாதேவி இவர்களது சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 18 **பன்ஜாரி**

மானு, தெல்கப், நவாடிஹ் ஆகிய பணித்தளங்கள் மேற்பார்வையிடப்பட்டது. விசுவாசிகள் உற்சாகப்படுத்தப்பட்டனர். ராஜ்முனி குன்வர் என்பவரது வீட்டில் வீட்டுக் கூடுகை நடத்தப்பட்டது. சங்கீதா, சீமா இவர்களது வியாதிக்காக ஜெபித்த போது விசுவாசமுள்ள ஜெபத்தால் தேவன் சுகத்தைக் கொடுத்தார். மனநிலை பாதிக்கப்பட்டிருந்த சாஹர் பிரஜாபதி என்பவரின் மனைவிக்கு தேவன் விடுதலையைக் கொடுத்தார். இப்பகுதி வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும் மற்றும் இப்பணித்தள சபை போதகருக்கு சபை அருகில் வீடு கிடைக்கவும் ஜெபியுங்கள்.

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

(Director of Missions, Gems,Bihar) *அவர்கள்*

பங்குபெறும் கூட்டங்கள்

ஜெபியுங்கள்! *பங்குபெறுங்கள்!!*

நாள்	இடம்	தொடர்பு
ஜனவரி 13, 14, 15 வெள்ளி, சனி, ஞாயிறு தினமும் மாலை 6.00 மணிக்கு சனி காலை 10 To 1 **குடும்பக் கூடுகை**	A.J.C. **பள்ளி வளாகம்,** LBS ரோடு, **கும்பகோணம்.**	94433 72078 99940 32360
ஜனவரி 16 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு	T.E.L.C. **ஆலய வளாகம்,** மணிக்கூண்டு அருகில், **பட்டுக்கோட்டை.**	98948 69840
January 20, 21, 22-01-2012 Friday, Saturday, Sunday Daily **5.30 To 8.30** P.M. சனிக்கிழமை காலை 10 To 1 **குடும்பக் கூடுகை**	Donbosco Hall, BalMatta, Hampankatta Road, **MANGALORE.**	9740547453 9036137993
January 27, 28, 29 Friday, Saturday, Sunday	**Rajendran Mydhan, ERNAKULAM**	94472 00573 094863 57950 90373 35829
பிப். 2 வியாழன் மாலை 5.30 மணி	Town Hall, ரயில் நிலையம் அருகில், **திருப்பூர்.**	98422 98244 90420 87100 94874 79530 98652 40498
பிப். 3, 4, 5 வெள்ளி, சனி, ஞாயிறு ❖ தினமும் மாலை 6.00 மணி	வ.உ.சி. மைதானம், அவினாசி ரோடு, **கோயம்புத்தூர்.**	93448 24072 0422 - 2405902

திலௌத்து

உஜைலா, சந்தன்பூரா, பஸ்டிஹ், சட்னி, சரெய்யா, விக்ரம்பீஹா, சிவ்பூர் ஆகிய இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. உதிரபோக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த ஷீலாதேவிக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். பிசாசின் கிரியை யினால் பாதிக்கப்பட்டிருந்த கிர்ஜாதேவி இயேசுவின் நாமத்தினால் விடுதலையானார். ஊழிய எதிர்ப்புகள் மாறவும், சிவ்பூர் வீட்டுசபைக்காகவும், வீரேந்தர் என்பவர் போதை பழக்கத்திலிருந்து விடுதலையாகவும் மற்றும் இப்பகுதியில் பெண்களுக்கு சிறப்புக் கூட்டம் நடத்தப்படவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 19 **சேவகி**

சேவகி, கோகுலா, மாஜாபூர், மாத்ரசேன்பூர், பக்ரா, ராம்டிஹாரா, பர்குவான் ஆகிய 7 இடங்களில் இயேசுவின் அன்பின் செய்தி அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. 'நமது மக்கள்' திட்டத்தின் கீழ் சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மஹாவீர்ராம் என்பவர் இயேசுவின் நாமத்தினால் விடுவிக்கப்பட்டார். அடிக்கடி தலைவலியினால் பாதிக்கப்பட்டிருந்த சரித்தா ஜெபத்தால் சுகமானார். துதியுங்கள்! இப்பணித்தள ஊழியருக்கு தங்குவதற்கு இடம் கிடைக்கவும், கர்ப்பமாக இருக்கிற அவருடைய மனைவி ஜோதிகுமாரி ரமேஷ் என்பவருக்காகவும் ஜெபியுங்கள்.

நாகடோலி

ரோஹ்தாஸ் மலை உச்சியில் செயல்பட்டுவரும் இப்பணித்தளத்தில் ஊழியம் வளர்ந்து கனி கொடுத்து வருகிறது. பேஸ்நாத் என்பவருடைய தாயார் ஜெபத்தால் சுகமானார். ஜிதேந்திரபுய்யா, பாபுராம்புய்யா, போலாயாதவ், காமேஷ்வர்புய்யா ஆகி யோர் புதிய தொடர்பில் உள்ளனர். பாபுலால், லலித், பிரோஜ், நரேந்திரா இவர்களது வீட்டில் ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டது. பிர்கி, பகாடியா, டுமாரியா ஆகிய கிராமங்களுக்காகவும் வியாதியினிமித்தம் மகன் இறந்த துக்கத்தில் இருக்கும் வினோத் என்பவரின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

ஜனவரி 20 **சட்னிபீஹா**

பிவுண், நில்கோட்டி கிராமங்களில் முதன்முதலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுவிசேஷத்திற்கு மக்கள் ஆர்வமாக செவிசாய்த்தார்கள். முழு வேதாகமம் 10 பேருக்கு விநியோகிக்கப்பட்டது. உஜைலா பகுதி ஜெபக் கூடுகைக்கு 15 பேர் கலந்து கொள்கின்றனர். பகல் பாதுகாப்பு மையத்தில் படித்து வருகிற பிள்ளைகளுக்காகவும், பஸ்டிஹா கிராம மக்களுக்காகவும் மற்றும் ரிங்கிகுமாரியின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

மாஜிகாவன்

தும்ஹா, சோஸ்பூர், பல்த்துவா, நிர்பூர், நவாடிஹ் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிக்கப்பட்டது. நிர்மல் பாஸ்வான், போலாராம் இவர்களது வீட்டில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த காமேஷ்வர் சௌத்ரி என்பவர் ஜெபத்தால் சுகமானார். நிர்மல் பாஸ்வான் என்பவருடைய மகன் காச நோயிலிருந்து சுகமாகவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவி கவித்தாவின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 21 **ரோஹ்தாஸ்**

இக்கோட்டத்தின் தலைமையிடமான இப்பணித்தளத்தில் ஊழியர் கூடுகை நடத்தப்பட்டது. இக்கோட்டத்தின் வருடாந்திர கன்வென்ஷன் 3 நாட்கள் ராம்டிஹரா பணித்தளத்தில் நடைபெற்றது. சுமார் 1000 விசுவாசிகள் கலந்து கொண்டனர். அநேக பணித்தளங்களில் உள்ள விசுவாசிகள் திருமுழுக்குப் பெற்றார்கள். தும்பா, நாகடோலி பணித்தளங்களில் சபைகள் கட்டி எழுப்பப்படவும், இங்கு கட்டப்பட்டு வருகிற ஊழியர்

பயிற்சிக்கூடம் விரைவில் கட்டி முடிக்கப்படவும், பன்சாரி, திலோத்து பணித்தளங்களில் ஊழியர்களுக்கு தங்குமிடம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

உஜைலா

இப்பணித்தள சபை ஞாயிறு ஆராதனையில் 40 பேர் கலந்து கொள்கின்றனர். போலாபூர், உஜைலா பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. ராம்சந்திரராம், ராஜுகுமார், தர்மஷீலா விசுவாசிகளான இவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். தொடர்ந்து அழுது கொண்டே இருந்த சிறுவனின் காரணத்தை மருத்துவர்களால் அறிய முடியாத நிலையில் ஜெபித்த போது தேவன் சுகத்தைக் கொடுத்தார். மூலவியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள சரித்தாகுமாரியின் சுகத்திற்காகவும், இப்பகுதியில் உள்ள வாலிபர்களுக்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய மனைவி தர்மஷீலாவின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 22

திலோக்கர்

சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுமார் 400 பேருக்கு சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. வீட்டுசபை ஆராதனையில் சராசரியாக விசுவாசிகள் கலந்து கொள்கின்றனர். ஊழிய பயிற்சிப் பெற்று வரும் இப்பணித்தள சபையின் 2 வாலிபர்களுக்காகவும், சவிதாவின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும் மற்றும் பஸந்தி என்ற விசுவாச சகோதரிக்குக் காணப்படும் திருமணத் தடைகள் மாறவும், அவர்கள் வீட்டில் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும் ஜெபியுங்கள்.

ராம்டிஹரா

கபாஸ்ராய், ஜோகோடிஹ் மற்றும் இப்பணித்தளத்திலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பின்தேஸ்வரி விசுவாச வளையத்திற்குள் வந்துள்ளார். சுதர்சன் சர்மா, ஜட்டு இருவரும் சபைக்கு புதிய வரவுகள். இங்கு கட்டப்பட்டுள்ள B.Ed கல்லூரியில் விரைவில் பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவும், இப்பணித்தள ஊழியர் மற்றும் தொடர் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மகய் II கோட்டம்

ஜனவரி 23

ஓபரா & ரஜௌலி

பட்ராமா, சங்கர்பூர், மசோவா கிராமங்களில் தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. 12 விசுவாசிகள் திருவசனத்திற்கு கீழ்ப்படிந்து திருமுழுக்குப் பெற்றார்கள். இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், மன்பதிதேவி என்ற சகோதரியின் சுகப் பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள்.

பபுலாராம், பரஸ்நாத்யாதவ், பாலேஷ்வர்தாஸ், ரவிதாஸ், பப்லூகுமார், சஞ்சன்தேவி ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளவர்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறதினிமித்தம் தனது கணவர் மற்றும் மகனால் துன்புறுத்தப்படும் விசுவாசியான சன்ரத்தேவிக்காகவும், கால் வலியினால் கஷ்டப்படும் அசோக்குமார் என்பவரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

குலாப்பீஹா, உதய்கஞ்ச், தேல்ஹாரா, கங்கர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. ஆலயம் கட்டுவதற்காக இடம் கிடைக்க ஜெபியுங்கள்.

ஜனவரி 24

ரோ (Roh) & அவுரங்கபாத் & டெக்காரி

சஹுல், பர்கேதா, அங்சார்நகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு முதன்முதலாக வழி திறக்கப்பட்டு, நற்செய்தி அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆராதனையில் கலந்து கொள்கிற புதிய விசுவாசிகளில் 4 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். குமாரி அபாவுக்கு கை வலி சுகமாகவும், போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிற சாரோ

ரவிதாஸ் என்பவரின் விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

இப்பகுதியில் சுமார் 200 பேருக்கு புதிய ஏற்பாடுகள் மற்றும் 10 பேருக்கு முழு வேதாகமம் விநியோகிக்கப்பட்டது. பாவத்திற்கு நேராக போய்க் கொண்டிருக்கிற இப்பகுதி வாலிபர்களுக்காகவும், ஆலயம் கட்டுவதற்கு இடம் சொந்தமாக கிடைக்கவும் ஜெபியுங்கள்.

3 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. சோட்டு, சங்கர் டாக்கூர் புதிய ஏற்பாட்டை ஆர்வமுடன் படித்து வருகிறார்கள். அபின்தாவின் கணவர் மனந்திரும்பவும், இப்பணித்தள சபையின் கட்டிட தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 25 **காதிர்கஞ்ச் & டோம்சந்த்ருமாப்**

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 10 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 20 பேர் புதிய தொடர்பில் உள்ளனர். விசுவாசிகளின் வீடுகளில் சென்று அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கப்பட்டு, அவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது. கல்யாண்குமார், தாமோதர்தாஸ் இருவரின் மனந்திரும்புதலுக்காகவும், ராஜ்குமார், சௌந்திரராஜன் இவர்களது சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மாயாடி, சரோனியா, சேக்வி, டாவ்ரோடு, சிங்லோடி, கிரிஷட்ரோடு ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு, சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 200 பேருக்கு யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டது. ரவி, விகாஷ் இருவரது ஆத்தும இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

இஸ்லாமியர் மக்கள் மத்தியில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. முகமது அசோக் ஆலம், மன்சரிஆலம், இப்ராயிம் மற்றும் பிராமண வகுப்பைச் சேர்ந்த பிந்துசிங், வினோத்சிங் ஆகியோர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டினார்கள். மனநிலை பாதிக்கப்பட்டுள்ள விசுவாசி மிருத்யி ஜெயகுமார் என்பவருடைய அப்பா அகிலேஷ் யாதவ் என்பவரின் சுகத்திற்காகவும், மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மம்தா குமாரியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 26 **ஹஸ்பூரா & கோபேர் & மதுவாயின்**

ஹய்யாபூர், ஹகலாடி, அஜாத்நகர், நர்லைன் ஆகிய 4 கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு, சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சலேம்பூர், சலேம்பூர்பீஹா, அமுனா, பாபுஅமுனா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு முதன்முதலாக வாசல் திறக்கப்பட்டது. இதன் வாயிலாக சுமார் 250 பேர் உலக இரட்சகரை அறிந்து கொண்டார்கள். இப்பணித்தள ஊழியரை விரோதிக்கும் அவரது உறவினர்களுக்காகவும், ஆலயம் கட்டுவதற்கு சொந்தமாக இடம் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

தையாரி, பச்சிம்பள்ளி, சநதிரபூரா கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 15 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுபாஷ்நகர், கேஷ்மா, பகாட்தள்ளி ஆகிய கிராமங்களில் வீட்டு ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. ஆலயத்திற்கு சொந்தமாக இடம் வாங்கப்பட ஜெபியுங்கள்.

பிரேனே, தர்மா, லூடி, டோலி, ரஸல்பூர், சந்த்தா ஆகிய 6 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. அஷ்ராஹிர், அன்சாரி, சன்ஜய்குமார், பிரேம் பாஸ்வான், மாத்திலேஷ் ராஜ்பன்ஸி விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள். இப்பணித்தள ஊழியருடைய மனைவிக்குக் காணப்படும் தலைவலி சுகமாகவும், ஆலயத்திற்கு நிலம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 27 **நபிநகர் & பர்ஹி & ராஜேந்திரநகர்**

சோனாக்கா, சேனவா கிராமங்களில் கிறிஸ்தவ பத்திரிக்கை (ஆத்மதர்ஷன்)

வாயிலாக இயேசுவின் நாமம் அறிவிக்கப்பட்டது. தானவ் கிராமத்தில் காணப்பட்ட ஊழியத் தடையை தேவன் மாற்றினார். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த சுஞ்சல்குமாரி ஜெபத்தால் விடுதலையானர். சகுந்தலாதேவி (கையில் வெள்ளைத்தழும்பு), ஹீராதேவி (தோல் வியாதி) மற்றும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ள இப்பணித்தள ஊழியருடைய உறவினர் ஆகியோரது சுகத்திற்காக ஜெபியுங்கள்.

தத்திரியா, ருபம்பெஞ், ரகுநாத்பூர், மால்தோ, தோஹாரி, பதன்பூர், பாரா, சாதிப்பூர், ஜோப்பர்பட்டி, கஜிததாபூர், கோயிரிடோலா, கும்ஹார்டோலி, பட்டுவாடோலி, படாரி, தையர்டோலி ஆகிய 15 கிராமங்களில் ஆண்டவரின் அன்பின் செய்தி அறிவிக்கப்பட்டது. சகுந்தலாதேவி (குழந்தை பாக்கியம்), ராஜுசின்ஹா (வியாபாரம்), மனோரம்மாதேவி (குடும்ப சமாதானம்), சுதாம்மா (லீவர் பிரச்சினை) இவர்களது சுகத்திற்காக ஜெபியுங்கள்.

புரஹா, அகோனா கிராமங்களில் வீட்டுசபை ஆசீர்வாதமாக நடத்தப்பட்டு வருகிறது. 6 பேர் சபைக்கு புதிய வரவுகள். 10 புதிய விசுவாசிகள் ஞானஸ்நானத்திற்கு அர்ப்பணித்துள்ளனர். இப்பகுதியில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், ராம்ரதன்ராம் மற்றும் இப்பணித்தள சபையின் பைபிள்மென் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 28 **கோடர்மா (கோட்ட தலைமையிடம்)**

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. சபை ஊழியம், கல்வி ஊழியம் நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து பணித்தளங்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பள்ளி பிள்ளைகள் வசனத்தில் தேறி வருகிறார்கள். கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. மாணவி நான்ஸியின் தந்தைக்கு கண்ணில் காணப்படும் பிரச்சினை மாறவும், ஆசிரியர் தேவை பூர்த்தியாகவும் ஜெபியுங்கள்.

5 இடங்களில் வீட்டுசபை நடத்தப்பட்டு வருகிறது. இப்பணித்தள பஜாரில் 10 வாலிபர்கள் தொடர் ஊழியத்தில் உள்ளனர். ராஜுசிங் என்பவரின் சிறுநீரகப் பிரச்சினைக்காக ஜெபிக்கப்பட்டது. பேபிகுமாரி, நிர்மலா, கஞ்சன்தேவி என்பவர்களுக்காகவும், இக்கோட்ட நிர்வாகத்திற்காகவும், இக்கோட்டத்தின் தலைவர் சகோதரர் விக்டர் இம்மானுவேல் அவர்களுக்காகவும் மற்றும் சபை வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

சிறுவர் ஊழியம் (Children Ministry)

ஜனவரி 29 **கயா**

ஜெம்ஸ் ஊழியத்தில் மகய், ரோக்தாஸ், வனாஞ்சல் மற்றும் Peace-I ஆகிய கோட்டங்களில் நடத்தப்பட்ட கன்வென்ஷன் கூட்டங்களில் சிறுவர்களை பிரித்து அவர்களுக்கு தனியாக சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 480 சிறுவர்கள் வசனத்தால் போதிக்கப்பட்டார்கள். அநேக தனியார் பள்ளிப் பிள்ளைகள் மத்தியிலும் கதை மற்றும் பாடல்கள் வாயிலாக வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

சுகோலி

சுக்கோலி, பெத்தியாசபை, மதுபனி, பெரையா, ஜகதிஸ்பூர், கட்டிமாபஜார், வால்மீஹிநகர் சபை, டாக்கா, அரேராஜ் சபை போன்ற இடங்களில் சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. வாலமீஹிநகர் பகுதியில் செயல்பட்டு வரும் சிறுவர் கிளப்பிற்கு காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், மாச்சர், முசஹார்டோலி கிராமங்களில் புதிதாக சிறுவர் கிளப் ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

ஜனவரி 30 **நவாதா**

அநேக கிராமங்களில் பாடல்கள் மற்றும் கதைகள் வாயிலாக சிறுவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 2 குடும்பங்கள் வசனத்திலும் விசுவாசத்திலும் வளர்ந்து வரு கிறார்கள். காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 14 வயதான சிறுவனின் சுகத்திற்காகவும்,

லோக்பூர் கிராமத்திற்காகவும் மற்றும் 12 வயதான ரவிக்குமாரின் குடும்பத்தில் சமாதானம் காணப்படவும், சரித்தாவின் திருமணத் தடைகள் மாறவும் ஜெபியுங்கள்.

பராஸ்ரம்

சாவன்பஜார், பகத்கஞ்ச் பணித்தளங்களில் உள்ள பகல் பாதுகாப்பு மையங்களிலுள்ள மாணவர்கள் மத்தியிலும் மற்றும் பனட்சரா, தைதஹா, ஹேல்கா போன்ற பகுதிகளில் உள்ள தனியார் மற்றும் அரசு பள்ளி பிள்ளைகள் மத்தியில் சுவிசேஷம் கடந்து சென்றது. மனநிலை பாதிக்கப்பட்டுள்ள பஹதுர் என்பவருக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சுகப் பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜனவரி 31 **கர்குவா**

அலிப்பூர் பகுதியில் சிறுவர்கள் ஊழியத்தில் உள்ள தன்னார்வ ஊழியர்களுக்கு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. தென்இந்தியாவிலிருந்து வந்திருந்த பாஸ்டர் சுவாமி நாதன் சிறப்பு செய்தி கொடுத்தார்கள். மான்பூர் பகுதியில் 5 சிறுவர் கிளப் ஆசீர்வாதமாக செயல்பட்டு வருகிறது. சேர்காட்டி கிளப்பின் புதிய தலைவருக்காகவும், சிவ்கஞ்ச் பகுதியில் சிறுவர்களின் பெற்றோரின் இரட்சிப்பிற்காகவும் மற்றும் முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ள சந்தோஷ்குமார் என்ற சகோதரனுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்திரபுரி

பபுவா என்ற பணித்தளத்தில் உள்ள சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. சிறுவர் தன்னார்வ தொண்டர்களுக்காக சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. மன்ஜியா கிராமத்தில் சுமார் 500 சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. சாம்பிஹாரி, நிந்துகுமாரி இருவரது சுகத்திற்காகவும், சிறுவர்கள் மத்தியில் வசனம் கிரியை செய்யவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 01 **சிக்காரியா**

சிறுவர் துறையின் தலைமை அலுவலகம் இப்பணித்தளத்தில் செயல்பட்டு வருகிறது. அனைத்து பணித்தள ஊழியங்கள் இங்கிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. ராம்டிஹரா பணித்தளத்தில் சுமார் 200 பிள்ளைகள் சந்திக்கப்பட்டு வருகிறார்கள். JET (Junior Evangelical Team) ஊழியத்தின் வாயிலாக இளம் வாலிபர்கள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள். 2012 ஆண்டிற்கான VBS ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகிறது. காப்பகங்களில் உள்ள சிறுவர்களுக்கு கை வேலைப்பாடுகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஜெம்ஸ் ஊழியத்தின் அனைத்து சபை சிறுவர்களுக்கு ஞாயிறு வகுப்புகள் நடத்தப்படவும், அவர்களை தொடர் ஊழியத்தில் சந்திக்கவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பகல் பாதுகாப்பு மையத்தின் சீனியர் மாணவ மாணவிகளுக்கு பெத்லா என்ற பணித்தளத்தில் ரெட்ரிட் நடத்தப்பட்டது. வசனத்தைக் கேட்டு வருகிற புறஜாதி பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

ரேணுகூட், மகாவல், முஷாபர்பூர், மல்லியாபாஃக், பபுவா, அக்பர்பூர், பெத்தியா, தராகர், மொகனியா ஆகிய பணித்தளங்களுக்காகவும், பணித்தள ஊழியர்களுக்காகவும் மற்றும் ஊழியத் தலைவர்கள் என்னார்சிங், கமலதாஸ் இவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

PEACE III கோட்டம்

பிப்ரவரி 02 **சாப்வா & டாக்கா**

கோபேயா, சுகாவ், மாவோபூர், புல்பாரியா, கோபேயாபஜார் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வியாதியோடு உபவாசக் கூடுகைக்கு வந்தவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது. திருவசனத்தைக்

கேட்டுவந்த புதிய விசுவாசிகளில் 11 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள். சபைக்கு நல்ல இடம் கிடைக்கவும், வசனத்தைக் கேட்டவர்களின் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்யவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய 3 பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

சுமார் 400 பேருக்கு சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. பின்மாற்றத்தில் இருந்தவர்கள் மீண்டும் தேவ சமுகத்தை தேடி வருகிறார்கள். இப்பகுதியில் காணப்படும் அந்தகார வல்லமைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

பிப்ரவரி 03 **நர்காட்டிகஞ்ச் & ரக்ஸோல்**

சிஹாடி, பகுவாரவான், பர்ஸா, ராம்வாரி மஹுஆ, ஸைத்பூர் ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. மனோஜ்குமார், பர்மோத்குமார், இந்திரதேவி, மாலதிதேவி, நிர்மலாதேவி, முனிக்ராம் ஆகியோர் சபைக்குக் கிடைத்த புதிய வரவுகள். திருவசனத்தைக் கேட்டு வந்தவர்களில் 10 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம். ஜமுனியா, பிராடி, புரைனியா, பைத்தாபூர், யருனாயா ஆகிய கிராமங்களில் நடத்தப்படுகிற வீட்டுசபை ஆராதனைக்காகவும், படக்காட்சி ஊழியங்களுக்காகவும் மற்றும் ஆலயம் சொந்தமாக கட்டப்படவும் ஜெபியுங்கள்.

ரக்ஸோல் பகுதியில் சக்தேவா, லஷ்மிபூர், கன்னா, டுமரியா, பரத்மயி, பன்டோக்தா, தஜ்மாடோலா, தரம்நகர் ஆகிய 8 இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சபை ஞாயிறு ஆராதனையில் 70 பேர் கலந்து கொள்கின்றனர். போதைக்கு அடிமையாகியுள்ள ஜெய்பிரகாஷ் இயேசுவின் அடிமை யாக மாறவும், நேப்பாள் தேசத்தின் எல்லையில் அமைந்துள்ள இப்பணித்தள ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 04 **வால்மிஹீநகர் & ராம்நகர்**

தேவன் சபைக்குக் கொடுத்த புதிய ஆத்துமாக்களோடு சபையில் ஞாயிறு ஆராதனை யில் 70 பேர் கலந்து கொள்கின்றனர். 4 கிராமங்களில் வீட்டுசபை நடத்தப்பட்டு வருகிறது. சரீர பெலவீனமாக இருந்த சந்தன்குமார் ஜெபத்தால் சுகமானார். சபை கட்டிடம் சொந்தமாக கட்டி எழுப்பப்படவும், ராஜ்பன்ஸி சௌஹான், நர்சிங் குஸ்வாஹா, ஜுஹுல்மாஜி, ஹரிமாஜி இவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

தைலாக், நவ்காவன், பகுவாரியா, பகடி, மகுவானி, பாரக்ஜவாஹ், மஹுயி, சிக்கட்பேல்வா, விலாஷ்பூர், நௌரானாபூர் ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இயேசு நம் மத்தியில் என்ற சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டது. 5 ஆத்துமாக்களை தேவன் சபை யில் சேர்த்துள்ளார். குலாச்சீதேவி, அனிதா, பிரமிளா, போலா, விர்ஜேஸ், பகுசுதான், பிரசான்ராம், காலிலா அன்ஸாரி, லால்பத்தி ஆகியோரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 05 **பெத்தியா (கோட்ட தலைமையிடம்)**

இப்பகுதியில் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூட்டத்தில் சுமார் 600 பேருக்கு சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அனேகர் பிசாசின் கட்டுகளிலிருந்தும், பாவத்திலிருந்தும் விடுதலையானார்கள். 4 கிராமங்களில் சுமார் 400 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக நற்செய்தி கடந்து சென்றது. இக்கோட்டத்திற்குட்பட்ட அனைத்து ஜெம்ஸ் சபை விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட 3 நாட்கள் கன்வென்ஷனில் சுமார் 1600 விசுவாசிகள் கலந்து கொண்டனர். போதகர் இமார் அவரது துணைவியார் அபுகனாசலே (இஸ்ரேல்) தேவனுடைய செய்தியைக் கொடுத்தனர். அல்பா ஊழியத்தின் வாயி

லாக ஊழியர்களுக்காக நடைபெற்ற ஊழியர் கூடுகையில் சுமார் 160 ஊழியர்கள் கலந்து கொண்டனர். கன்வென்ஷன் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு விசுவாசியின் குடும்பத்தினரை கட்டி வைத்து அடித்துள்ளனர். விசுவாசிகளை அடித்து துன்புறுத்துகிற சூர்யா கிராமத்தினர் மனந்திரும்பவும், பர்வத் கிராம விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 06 **சேம்ரா & மதுர்காவன்**

ஐக்கியா, பேரியா, சேமராகாஸ்டோலா, நரியரவான், பூஜாரிடோலா, பேல்ஹட்டி, சேம்ரா ஆகிய 7 இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தொடர் ஊழியத்தில் உள்ளவர்கள் புதிய ஏற்பாட்டை படித்து வருகிறார்கள். ஜெய்குமார் என்பவரது வீட்டில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. அஸ்யந்த்ராம் என்பவருக்கு நிலப்பிரச்சினையில் நியாயம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய பெற்றோருக்காகவும் ஜெபியுங்கள்.

ஹர்பூர், பேல்வாஹி, மதுரிகர்வான், பூர்விடோலா கிராமங்களில் வீட்டுசபை நடைபெற்று வருகிறது. 20 பேர் திருமுழுக்குப்பெற ஆயத்தம். விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. சிசிரிவாதேவி பிசாசின் கிரியையிலிருந்து ஜெபத்தால் விடுதலையானார். சபைக்கு மின்சார வசதி கிடைக்க ஜெபியுங்கள்.

பிப்ரவரி 07 **டோம்நகர் & கத்தையாபஜார்**

ஜஜலிடோலா, பகிச்சாடோலா, கச்ஹரிடோலா ஆகிய 3 இடங்களில் சுவிசேஷத்திற்கு முதன்முதலாக வழி திறக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு பெற்றவர்கள் ஆர்வத்தோடு படித்து வருகிறார் கள். இப்பணித்தள ஊழியருடைய சுகத்திற்காகவும், சொந்தமாக ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

ஹர்தியாபட்டி, ஹர்தியா, விசுன்பூரா, சைகியாடோலா, கட்டையா ஆகிய 5 கிராமங்களில் அன்பரின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பாம்பு கடித்த விசுவாசி யின் குழந்தைக்கு விசுவாசத்தோடு ஜெபித்த போது தேவன் சுகத்தைக் கொடுத்தார். திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும், ஆலயத்திற்கு சொந்தமாக இடம் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 08 **பைரியா & நான்பூர்**

மலாஹி, முர்கஹி, பக்நஹா, பர்காட்டியா, மோத்திபூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி கைப்பிரதிகள் வாயிலாக அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து சரீர பெலவீனத்தோடு இருந்து வந்த ஜித்தேந்தர் என்பவர் ஜெபத்தால் சுகமானார். புதிய தொடர்பில் இருந்தவர்களில் 15 பேர் சபைக்கு புதிதாக வருகிறார்கள். இப்பணித்தள ஊழியருடைய மகளின் படிப்பிற்காகவும், இப்பகுதி மக்கள் விக்கிரக வழிபாடுகளுக்கு விலகவும் ஜெபியுங்கள்.

நான்பூர் கிராமத்தில் சிறுவர்கள் மத்தியில் ஊழியம் நடத்தப்பட்டது. சபை கூடுகை, வீட்டுசபை மற்றும் வாலிபர்கள் மத்தியிலும் ஊழியம் நடைபெற்றது. படக்காட்சி வாயி லாக அனேகர் கிறிஸ்துவின் வாழ்க்கையை அறிந்து கொண்டனர். சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், வாலிபர்களின் ஆத்தும இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 09 **டோஹாராஹா & மகாவல்**

6 இடங்களில் நடத்தப்படுகிற ஜெபக் கூடுகை வாயிலாக கிறிஸ்துவின் வல்லமை இப்பகுதியில் வெளிப்பட்டு வருகிறது. வசனத்தைக் கேட்டு தங்கள் வாழ்க்கையில் திருமுழுக்குப்பெற சிலர் ஒப்புக் கொடுத்துள்ளனர். இப்பகுதியில் ஊழியத்திற்குக் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தப்படவும் மற்றும் ஊழிய ருடைய குடும்பத்தினர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

மகாவல் பணித்தளத்தில் சுவிசேஷ ஊழியம், சபை ஊழியம், கல்வி ஊழியம் ஆசீர்வதமாக நடைபெற்று வருகிறது. ஆங்கிலப்பள்ளியில் 60 பிள்ளைகள் ஆரம்பத்தில் படிக்க வருகிறார்கள். சக்கியா, மெஸி, கண்டஹரி கிராமங்களில் ஜெபக் கூடுகை தடையில்லாமல் நடத்தப்பட்டு வருகிறது. சபினாதேவி, சம்பந்திதேவி, சங்கீதாதேவி, சஞ்ஜோ, குந்தன், லக்ஷ்மிதேவி ஆகியோர் விசுவாச வளையத்திற்குள் வந்துள்ளனர். பிரிவினை செய்து வருகிற லால்தேவ் மனந்திரும்பவும், இஸ்லாமிய சகோதரி சபீனாவுக் காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 10 **மோத்திஹாரி & சடீஸ்பூர்**

கோட்டுவா பகுதியிலிருந்து 2 பேர் சபைக்கு புதிதாக வருகிறார்கள். பல்கன்வா, பெலிசரல், ரகுநாத்பூர், பத்ஹரா, மோத்திஜாரத், பில்வனுவா ஆகிய 6 கிராமங்களில் அன்பரின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சீத்தாதேவி, சுசிலாதேவி, சரஸ்வதிதேவி ஆகியோருக்காகவும், விசுவாசிகளின் குடும்பங்களில் வறுமை மாறவும் மற்றும் இப்பணித்தள சபை கட்டிடத்திற்கு சொந்தமாக இடம் வாங்கப்பட்டு ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

சுரேராத், ஜகதீஷ்பூர், பன்ஹரவா, ஹரிநகர், ஜக்கரா, சோனோவல், கோவிந்தகஞ்ச் ஆகிய 7 கிராமங்களில் இறைமகனின் அன்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த தும்பாதேவி இயேசுவின் நாமத்தினால் விடுதலை யானார். மஹனத்சாஹ், பகவான்சாஹ், மகேந்திரராம், மகேஷ்குமார், கபிலால்பிரசாத், லால்பகதூர் பிரசாத், பிரதிநாத் பிரசாத் ஆகியோரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

பிப்ரவரி 11 **சிரைய்யா & நௌடன்**

கோடா, ராம்பூர், பேடியாரி, மதேபூர் பிடாடி, கோண்டா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டு, பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. பிடாடி கிராமத்தில் சிறுவர்களுக்கான ஞாயிறுபள்ளி நடத்தப்பட்டு வருகிறது. வியாதியஸ்தருக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஊழியத்தை விரோதிக்கும் அன்பர்கள் இயேசுவின் அன்பை ருசிக்கவும், இப்பகுதியில் காணப்படும் ஜாதிப்பிரச்சினை மாறவும் ஜெபியுங்கள்.

5 கிராமங்களில் சுமார் 300 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுவிசேஷ நற்செய்தி கடந்து சென்றது. புதிய தொடர்பில் உள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. லக்ஷ்மிநகர், ஜெய்நகர், முஸாரிடோலா பகுதிகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. சரியான வளர்ச்சியில்லாமல் இருக்கிற 7 வயதான அசோக்குமாரின் அற்புத சுகத்திற்காகவும், ராம்ஜித்மாஜி, லாலன்ராம், சந்தோஷ், பரசு ராம் இவர்கள் விசுவாசத்தில் பெலப்படவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 12 **புத்நகரா & மஜௌலியா**

பாவூர், பத்துக்கா, புத்நகரா, சாமர், பனைல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ள அனேகருக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. 2 இடங்களில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. உடல்நிலை பாதிக்கப் பட்டிருந்த இப்பணித்தள ஊழியருக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். வாலிபர்களுக்காக சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. புதிய விசுவாசிகள் சபைக்கு தடையின்றி வரவும், ஊழியருடைய பெற்றோருக்காகவும் ஜெபியுங்கள்.

தஹிடிக்டோலா, தோஜ்நகர், சங்கோலி, துருஆயான், தோஹாசிம்ரா ஆகிய 5 இடங்களில் வீட்டுசபைகள் நடத்தப்பட்டு வருகிறது. பல வருடங்களாக பிசாசின் பிடியிலிருந்த காந்தி தேவியை இயேசுவின் அற்புதக் கரம் விடுவித்தது. காசநோயி னால் பாதிக்கப்பட்டிருந்த கலாவதி சுகமானார். காவல் துறையினரால் துன்புறுத்தப்படுகிற

உடன் ஊழியருக்காக ஜெபியுங்கள்.

பிப்ரவரி 13 **தோர்பூர் & சுகாடி**

நான்பூர், பிபூத்பேட்டுவா, ரைடா, மபௌர், பூபரி ஆகிய கிராமங்களில் சுமார் 200 புதிய ஏற்பாடு விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வியாதியோடு வந்திருந்த புறஜாதி மக்களுக்காக ஜெபித்த போது தேவன் சுகத்தைக் கொடுத்தார். குழந்தை பாக்கியமில்லாதிருந்த சத்ருதன் என்பவருக்காக ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரது மனைவியின் கர்ப்பத்தை ஆசீர்வதித்தார். இப்பணித்தள ஊழியருடைய திருமணத்திற்காகவும், தொடர் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

உபஹய்யாடோலா, உக்ரசேன்டோலா, பரோஹியா, ஜப்தோல், பலிராம்பூர் ஆகிய 5 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. பூனம், ரேணு தேவ வல்லமையால் தொடப்பட்டனர். இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் பிரவின்குமார், பிபின்குமார் இவர்களின் படிப்பிற்காக ஜெபியுங்கள்.

NET ஊழியங்கள் (முகமதியர் மத்தியில் ஊழியம்)

பிப்ரவரி 14 **ஆரா**

30 இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. புதிதாக சபைக்கு 6 பேர் வருகிறார்கள்.

நவாதா: சுதாம்மாநகர், நவாதாபஜார், பரா, கஸ்தூரிபீஹா, பக்சௌதி பசோடி, ராஜ்கீர், ஜெயராம்பூர் போன்ற இடங்களில் இரட்சிப்பின் நற்செய்தி இடைவிடாது அறிவிக்கப்பட்டு வருகிறது. வசனத்திற்கு ஆர்வம் காட்டி வருகிற ஷாகில், சிக்கந்தர்ஆலம், இப்தஹார் அகமத், அஜ்ஜி மன்னா ஹைதர்அலி, சம்ஷேர், முஸ்தாக், அஸரப், அப்துல் அன்சாரி, மன்ஜுர் இமாம், அலாவுதீன் ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

மடார்பூர்: இப்பகுதியைச் சேர்ந்த முகமதியர் தொடர் ஊழியத்தில் சந்திக்கப்பட்டு வருகின்றனர். வீடுகள் தோறும் சுவிசேஷ புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மௌலாக்களுக்கு உருது புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டது. சமீர் என்பவரின் வியாபாரத்திற்காகவும், சஞ்சயின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

வெளிநாட்டினர் தொடர்புக்கு

MR. RAJADURAI
MASCUT - 0096895912309

PASTOR OSWIN MICHAEL
U.S.A. - 0012019936937

MRS. JEYANTHI E. PAUL
BAHRAIN - 0097317215968

PR. SUNDAR SAVARIMUTHU
CANADA - 0016472874853

MR. SIMON HAZLITT
KUWAIT - 00965 - 66877157

Bro. SAM
SINGAPORE - 0065 81987540

உலகச் செய்திகள்

- நம் நாட்டில் விவசாயிகள்தான் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்வதாக நம்பப்படுகிறது. ஆனால், தற்கொலை செய்தவர்களில் தொழில் முனைவோரே அதிகமாக உள்ளதாக புள்ளிவிவரம் கூறுகிறது. நன்றி: தினகரன்

- கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டத்தின் போது, நைஜீரியாவில் 2 சர்ச்களில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் 27 பேர் உடல் சிதறி பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்தனர். நன்றி: தினகரன்

- பழவேற்காடு ஏரியில் உல்லாச சவாரி சென்ற படகு, கடல் முகத்துவாரம் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், படகில் பயணித்த, 22 பேர் மூழ்கி பலியாயினர். மூன்று சிறுவர்கள் மீட்கப்பட்டனர். கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கொண்டாட வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலியான சம்பவம், பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. நன்றி: தினமலர்

- கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 90 நோயாளிகள் உடல் கருகியும், மூச்சு திணறியும் இறந்தனர். இதையொட்டி மருத்துவமனை நிர்வாகிகள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். நன்றி: தினத்தந்தி

- பிலிப்பைன்சில், வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை, ஆயிரத்து 249 ஆக அதிகரித்துள்ளது. மேலும் தோண்ட தோண்ட பிணங்கள் வந்து கொண்டே இருக்கிறது. நன்றி: தினமலர்

(உலக செய்திகளுக்காக ஜெபியுங்கள்)

Edited & Published by T. Samraj for GEMS Educational Media Services, from 58, Pon Nagaram, Tuticorin-628 002. Ph : 0461-2362582. Printed by S. Jairus Ponnaiah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai - 627 002. Ph : 0462-6531119. Director : D. Augustine Jebakumar.

GEMS PROMOTION SERVICE CENTERS

CHENNAI	8, 3rd Jeevan Nagar, Adambakkam, CHENNAI - 600 088. Ph : 044-22670099
CHENNAI	16, Perumal Kovil Street, Nerkundram-600 107 Cell : 9444017330
COIMBATORE	2, Anbu Nagar 4th Street, Vadavalli Road, Edayarpalayam, COIMBATORE - 641 025. Cell : 93448 24072
DINDUGAL	108, Esther Cottage, Round Road, Puthur, Dindugal - 624 005 Cell : 9487859633
ERODE	No.6, Kalai Nagar, Rangampalayam, ERODE - 638 009. Cell : 94869 76202
KODAIKANAL	143-2, Packiapuram, KODAIKANAL-624 101. Cell: 94432 21776
KOVILPATTI	11, Theppakulam Street, KOVILPATTI - 628 501. Ph : 04632 225890
MARTHANDAM	N.S. Building, Kulasekaram Road, MARTHANDAM, K.K.District - 629 165. Cell : 97886 89771
NAZARETH	17-B, Ebenezer Street, NAZARETH - 628 617. Ph : 04639 277820, Cell : 9789464605
SIVAKASI	3/1350/9, Sattur Road, Parraipatti, SIVAKASI - 626 189. Cell : 98430 88840
TIRUNELVELI	No. 2, Jesus House, Ratchakar Street, Murugankurichi, Palayamkottai-627 002 Cell : 98653 11225
TUTICORIN	38, Sarangapani Street, TUTICORIN - 2. Cell : 94422 10629
TUTICORIN	J.S. Traders, Hotel Geetha Complex, Polepettai, TUTICORIN - 628 002. Cell : 94421 66061
VELLORE	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, VELLORE - 632 009. Cell : 99525 45181
TRICHY	36-45, Papa Colony, Edamalaipattipudur, TRICHY - 620 012. Cell : 98949 65520, 94431 88521

REGIONAL PROMOTION CO-ORDINATION CENTRE

CHENNAI	Plot No. 19-A, 3rd St, Megala Nagar, Vengaivasal -600 073 Cell : 94447 63141
MADURAI	Plot No. 21, Sharon Church Street, Booman Nagar-625 018 Cell : 98655 83563
NAGERCOIL	66-E, Bright Street, NAGERCOIL-629 001. Cell:94429 34613
TRICHY	Mahanaim, 1, Abdul Gazoor Street, Kajah Nagar - 620 020 Cell : 94435 55577

OTHER STATE PROMOTION CO-ORDINATION CENTER

BANGALORE	No. 10, 4th Cross (2nd Floor) Oil Mill Road, Lingarajapuram, St. Thomas Town Po, 560 084 Cell : 094485 17025
MUMBAI	B/1013, Station Plaza, Station Road, Bhandup (W), 400 078. Cell : 093227 30294, 098207 01775
PONDICHERRY	Old No. 20, New No. 1, III Cross, 1st Floor, Victoria Nagar - 605 005. Cell : 94867 96631
KERELA	No. T.C. 14/768, Observatory Lane, Palayam, Trivandrum-695 033 Cell : 09486357950, 9447470953

GENERAL PROMOTION CO-ORDINATION CENTRE

GEMS, 10, Thamarai Street, Santhose Nagar, P&T Nagar, MADURAI-625017.
Cell: 94434 29735, E-mail: promotions@gemsbihar.org

Postage Prepaid Posted at Tuticorin BPC

REGD. NEWS PAPER No. : ROC 54651/88

POSTAL Regn. No. : TTN-180 / 2012-2014

Licence to Post without Prepayment No. :

POSTED AT BUSINESS CENTER, TUTICORIN ON 10 & 13.1.2012

Field Office

GEMS, Sikaria, Indrapuri - 821 308.
Rohtas Dt., Bihar. Ph : 06184 - 234567
(Railway Station & Courier Centre : Dehri-on-sone)
Website : www.gemsbihar.org, E-mail : gems@gemsbihar.org

Regd. Office

GEMS, 11,13th Cross St.,
New Colony, Chrompet, Chennai - 44
Ph : 044-22386031
044-22380295



நீ
இல்லாவிடில்
இந்தி
மொழியாக்கம்

Rs.
120/-

தபாலில் பெற
கூடுதலாக ரூ.40/-

DVD கிடைக்கும்
இடங்கள்...

GEMS Educational Media Services

11,13th Cross St., New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

GEMS, 16-A, Chinna Koil Street,
Adaikalapuram, Murugankurichi,
Tirunelveli - 627 002. Ph : 0462-2581131

if undelivered please return to

Promotional Administrative Centre

GEMS, 16-A, Chinna Koil Street, Adaikalapuram, Murugankurichi,
Tirunelveli - 627 002. Ph : 0462-2581131 E-mail : nellaioffice@gemsbihar.org

To ....

....

....

....

....

....